பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 30 திங்கட்கிழமை (13.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :199

# இயலுமான விரைவில் பொதுக்கட்டமைப்பு: தமிழ்க் கூட்டமைப்பிடம் ஜனாதிபதி உறுதி!

## திருமலை புத்தர்சிலை விவகாரத்திலும் உரிய வழிமுறையில் நடவடிக்கையாம்

கொழும்பு,ஜூன் 13

**பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தாம் உறுதியாக இருக்கிறார் எனவும் இயன்ற விரைவில் அதைத் தாம் ஏற்படுத்துவார் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழுவிடம் உறுதியளித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்திலும் அப்பிரச்சினையைத் தீர்க்க உரிய வழிமுறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் உறுதி கூறியிருக்கின்றார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் ஆகியோர் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் ஜனாதிபதி குமாரதுங்கவை அவரது அழைப்பின் பேரில் நேற்று மதியம் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தனர். சுமார் நான்கு மணிநேரம் இச்சந்திப்பு நீடித்ததாகத் தெரிகின்றது.

சந்திப்பின் முடிவில் இந்தச் சந்திப்புக் குறித்து ஒரு செய்திக் குறிப்பும் விடுக்கப்பட்டது. இச்சந்திப்பில் ஜனாதிபதியுடன் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் ஆரம்பத்தில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு (சுனாமி நிவாரணக் கவுன்ஸில்) உடனடியாக நிறுவப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் வீரச்சாவு

கருணாவின் சதி முறியடிப்புச் சமரில் கடந்த ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி வீரச்சாவடைந்த போராளிகள் 8 பேரின் பெயர்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அந்த மாவீரர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

வீரவேங்கை தேன்முகில் (தங்கவேல் வசந்தகுமாரி/தேவி, கித்துள்வேவா, கரடியனாறு, மட்டக்களப்பு)

வீரவேங்கை தோகையெழி (இராசநாயகம் இந்துமதி, தும்மங்கேணி திக்கோடை, மட்டக்களப்பு)

வீரவேங்கை சிவாசி(பாலசுந்தரம் தேவகி, 9ஆம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

வீரவேங்கை தாரணி(இராசதுரை ரதி, கரடிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் - புலிகள் நேற்று சம்பூரில் பேச்சு

திருகோணமலை,ஜூன்13

விடுதலைப் புலிகளுக்கும் தோப்பூர் முஸ்லிம் பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று விடுதலைப் புலிகளின் சம்பூர் அரசியல் பணிமனையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தோப்பூர் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள் மற்றும் விவசாயப் பிரச்சினைகள் தொடர்பாக சுமுகமான முறையில் ஆராயப்பட்டதாக திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். (ஓ-12)

## புலிகளுடன் சேர்ந்து செயற்படக்கூடாது எனக்கூற ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் இல்லை!

### ஜனாதிபதி படு காட்டம்

கொழும்பு,ஜூன்13

பயங்கரவாத அமைப்புடன் கூட்டுச்சேர்ந்து செயற்படக்கூடாது என்று அரசுக்குக் கூறுவதற்கு ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் கிடையாது. அவர்கள் தமது ஆயுத கலாசாரத்தை கைவிட்டுவிட்டுத்தான் ஜனநாயக அரசியலுக்கு வந்திருக்கின்றோம் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் இதுவரை கூறியது கிடையாதே.

- இப்படி ஜே.வி.பியினரைக் கடுமையாகச் சாடுகிறார் ஜனாதிபதி 'சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுக் காலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் சிங்கள சேவையில் 'சுபாரதி' என்ற நிகழ்ச்சிக்கு நேரடிப் பேட்டியொன்றை அளித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுவந்த ஜே.வி.பியினர் இன்று எமது அரசில் பிரதான பங்காளிகளாகவும் இருக்கின்றார்கள். பொதுக் கட்டமைப்பு விடயத்தில் கடுமையாக அரசை விமர்சிக்கும் ஜே.வி.பியினர் தாம் முன்வைத்திருக்கும் தீர்வு பற்றி எதையும் அறிவிக்கவில்லை. அப்படியெனில் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு வைத்திருக்கும் தீர்வுதான் என்ன?

பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாரின் நடவடிக்கைகளுக்குப் பயந்தே உண்ணாவிரதத்தை கைவிட்டார் சோபித்த தேரர்

### பின்னணித் தகவல்கள் கசிகின்றன

கொழும்பு,ஜூன்13

பொதுக்கட்டமைப்புத் திட்டத்துக்கு எதிராகக் கண்டி தலதா மாளிகை மகாமளுவ திடலில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த ஜாதிக ஹெல உறுமய எம்.பியான வண.ஓமல்பே சோபித்த தேரர் நேற்றுமுன்தினம் காலையில் தமது உண்ணாவிரதத்தைக் கைவிடாமல் இருந்திருந்தால் அவரை உண்ணாவிரதம் இருக்கும் இடத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு பொலீஸார் தயாராக இருந்தனர் என்ற செய்தி இப்போது வெளியாகியிருக்கின்றது.

மேற்படி இடத்தில் உண்ணாவிரத நடவடிக்கை மேற்கொள்வது சட்டத்துக்கு முரணான விவகாரம் என்று சுட்டிக்காட்டி, உண்ணாவிரதம் இருக்கும் தேரரை அங்கிருந்து அகற்றவும், அந்தத் திடலில் உண்ணாவிரதத்துக்காகப் போடப்பட்டிருந்த மேடையை அங்கிருந்து அப்புறப்படுத்தவும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பொலீஸார் கண்டி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஒரு விண்ணப்பத்தைச சமர்ப்பித்து அதறகு நீதிமன்ற உத்தரவு பெற்றிருந்தனர் என்றும்-

இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கு கலகம் அடக்கும் பொலீஸாரோடு, கண்டி பொலீஸ் பிரிவு தயாராக இருந்தது என்றும் -

இந்த விடயம் கசிந்ததை அடுத்தே தேரரின் சாகும்வரையான உண்ணாவிரதத்தைக் கைவிடும்முடிவு எடுக்கப்பட்டது என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிக்குள் நுழைந்த கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு,ஜூன்13

மூதூர், உப்பாறு கடற்பரப்பில் புலிகளின் பகுதிக்குள் பிரவேசித்த படகில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் கிண்ணியாவிலிருந்து மூதூர் நோக்கிச்சென்ற பயணிகள் படகு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளது. உடனடியாகப் படகை வழிமறித்த கடற்புலிகள் அதில் பயணித்தவர்களை சோதனையிட்டனர் அப்போது படகில் இருந்த ஏழு பேருடன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர்களும் தெற்கில் போராட்டத்தில் குதிக்க ஆயத்தம்!

### பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு வலுக்கின்றது

கொழும்பு,ஜூன்13

பொதுக்கட்டமைப்பு யோசனைகளுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட அனைத்து மாணவர்களையும் அணிதிரளுமாறு ஜே.வி.பியின் அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்புவிடுத்துள்ளது.

இன்று மருதானையில் இருந்து ஜனாதிபதி மாளிகை வரையில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தவும் அது திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டிருக்கும் பொதுக்கட்டமைப்பு என்பது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் ஒரு செயலாகும். இந்தச் செயலுக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டார்கள். இந்த முயற்சியை ஜனாதிப்தி தொடர்வாரேயானால் அனைத்து மக்களையும் அணி திரட்டிப் போராடும் நிலைக்கு தாம் தள்ளப்படுவோம் என அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் துமிந்த நாவின்ன தெரிவித்தார்.

களனி மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகங்களில் கடந்த சனிக்கிழமை முதல பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிக்கு எதிராக சத்தியாக்கிரகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை புத்தர்சிலை விவகாரம் இன்று மீண்டும் நீதிமன்றத்தில்

திருகோணமலை,ஜூன்13

திருகோணமலை நகர பஸ் நிலையத்திற்கு அண்மையில் இரவோடிரவாக நிறுவப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலை தொடர்பான விசாரணை மாவட்ட நீதிமன்றில் இன்று மீண்டும் இடம்பெறவுள்ளது.


சட்டமா அதிபர் திணைக்களம் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட நதிபதி எஸ்.தியாகேந்திரன் திடீர் புத்தர் சிலையைச் சுற்றி எவ்விதமான கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என கடந்த விசாரணையின் போது இடைக் காலத்தடை பிறப்பித்திருந்தார்.

14 நாள்களுக்கு ஒருமுறை சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் இந்த இடைக்காலத் தடையை நீடிப்பதற்கான அனுமதி திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் பெறவேண்டும். இதுதொடர்பான விசாரணையே இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இடைக்காலத் தடை நீடிப்பைப் பெறுவதற்காக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் இன்று ஆஜராகாதுவிடின் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத்தடை செல்லுபடியற்றதாகிவிடும்.

திடீர் புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பான விடயம் நீதிமன்றின் இன்றைய அமர்வில் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிகிறது. இடைக்காலத் தடையை நீடிக்கும் உத்தரவையே மாவட்ட நீதிமன்றம் இன்றும் வழங்கும் எனத் தெரிகிறது.

(க)



யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுவரும் மாவீரர் நினைவுத் தூபியினைப் படத்தில் காணலாம். இந்த நினைவுத் தூபி இம்மாத இறுதிக்குள் திறந்துவைக்கப்படவுள்ளது. (படம் : கவிதரன்)

# இடமாற்றத்தை ஏற்கமறுக்கும் அலுவலர்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்13

உள்ளூராட்சி அமைப்புகளில் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றவர்கள் புதிய நிலையத்தில் பதவியேற்காதுவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படக்கூடும் என்று மாகாண அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

பதவி உயர்வு வழங்கப்பட்டு குறித்த அலுவலர் இடமாற்றம் செய்யப்பட்டால் புதிய அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர் பதவியினைப் பொறுப்பேற்கவேண்டும்.

இல்லாவிடில் தாபன வழிக்கோவையின்படி சம்பந்தப்பட்ட அலுவலர்மீது நியமன அதிகாரி நடவடிக்கை எடுப்பார்.

இடமாற்றம் பெற்ற அலுவலர் குறித்த புதிய நிலையத்தில் பதவியினை ஏற்காது தொடர்ந்தும் பழைய இடத்தில் தனது கடமைகளை நிறைவேற்ற முயன்றால் நியமன அதிகாரி அவரது பதவி உயர்வு சந்தர்ப்பத்தினை இரத்துச் செய்யக்கூடும். அத்துடன் குறிப்பிட்ட அலுவலரை பழைய பதவி நிலைக்கு வகுப்பு, தரம் குறைக்கப்பட்டு - அறிவிக்கும் நடவடிக்கையை வடக்கு - கிழக்கு மாகாண அரசு மேற்கொள்ளும்.

மேற்படி பதவி உயர்வு, இடமாற்றம் குறித்து குறித்த காலப் பகுதிகளில் அதனை நடைமுறைப்படுத்தாத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாகாண அரசுக்கு அதிகாரம் உள்ளது. - இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேச சபையில் செயலாளராகப் பணியாற்றியவருக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதும் -

ஆனால் அவர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளவிடம் பொறுப்பை ஒப்படைக்காது உள்ளார் என்பதும் -

குறிப்பிடத்தக்கவை.

(ஓ-185)

# அமைச்சர்களின் பண மோசடிகளால் திக்கம் வடிசாலை நஷ்டமடைந்தது

## சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்13

வடமராட்சி திக்கம் வடிசாலை இந்துசமய விவகார அமைச்சின் கீழ் இருந்த காலப் பகுதியில் அந்த அமைச்சில் அமைச்சர்களாக இருந்தவர்கள் பல கோடி ரூபா நிதியினை மோசடி செய்துள்ளனர். இதனாலேயே திக்கம் வடிசாலை நஷ்டத்தில் இயங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கி.தவராசா.


யாழ். சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைமை அலுவலகத்தில் நேற்று அவர் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினார். அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திக்கம் வடிசாலை 2001ஆம் ஆண்டு இந்து சமய விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அப்போது அந்த அமைச்சின் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா இரண்டரைக் கோடி ரூபாவும் -

அதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு இந்து சமய விவகார அமைச்சராகவிருந்த தி.மகேஸ்வரன் ஒரு கோடி 88 லட்சம் ரூபாவும் மோசடி செய்திருக்கின்றனர்.

இந்து சமய விவகார அமைச்சரிடமிருந்து திக்கம் வடிசாலை 2003 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. திக்கம் வடிசாலையை வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பொறுப்பேற்றபோது கணக்காய்வுகள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை.



வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சமாசத் தலைவர் கி.தவராசா மற்றும் கணக்காளர்கள் ஆகியோர் விளக்கமளிக்கின்றனர். (படம் : நேசன்)

இதன் காரணமாக உரிய கணக்காய்வுகள் இல்லாமல் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தடுமாறுகின்றது. குறிப்பிட்ட காலப் பகுதிக்கான கணக்காய்வு அறிக்கைகள் எவையும் கணக்காளரிடம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திக்கம் வடிசாலை நஷ்டத்தில் தள்ளப்பட்டதற்கு இதுவே காரணம்.

இதனால் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திக்கம் வடிசாலை ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமை சமாசத்தின் நெறியாளர்கள் ஆணைக்குழுச் சட்டப் பிரமாணத்தின் அமைவாகவே சமாச நெறியாளர் குழுவால் முடிவு செய்யப்பட்டது என்றார் அவர். (ஒ-7-86)

## பாதுகாப்பு வலயத்தில் நேற்று வெடியோசை

கரவெட்டி,ஜூன்13

பலாலி உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் நேற்று மாலை கேட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் ஷெல் குண்டு வெடிப்புச் சத்தங்களால் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

தொண்டைமானாறு, மான்பாஞ்சவெளிப் பகுதியிலிருந்து இந்த வெடிச்சத்தங்கள் கேட்டன. படையினர் நடத்தும் வழமையான பயிற்சியின் போதே இந்தச் சத்தங்கள் எழுந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஒ-70)

## வயோதிபர் சடலம் மீட்பு!

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் முன்பாக சுமார் 70 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. ஜோசப் என்று அழைக்கப்படும் இந்த நபர் இப்பகுதியில் சுமார் 2 வருட காலமாக நடமாடினார் என்று கூறப்படுகிறது. மேற்படி சடலம் தற்போது வல்வெட்டித்துறை மருத்துவமனை பிரேதசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அதனை அடையாளம் காண உறவினர் அல்லது தெரிந்தவர்கள் உதவும்படி மருத்துவமனைப் பொறுப்பு மருத்துவர் டாக்டர் மயிலேறும்பெருமாள் கேட்டுள்ளார்.

## உதவிப் பண கொடுப்பனவு

தென்மராட்சி,ஜூன்13

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர், காசநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவு இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான கொடுப்பனவுக் காசோலைகள் மற்றும் பட்டியல்கள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# நாட்டில் பதற்றத்தைத் தணிக்க தேர்தலுக்குச் செல்வதே ஒரே வழி

## லங்கா சமசமாஜக் கட்சி வற்புறுத்தல்

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தணிக்கவேண்டுமெனில் உடனடியாக தேர்தலொன்றுச்குச் செல்வதே சிறந்த வழி. மக்கள் தீர்ப்புக்கு முன்னுரிமை வழங்குவதே பொருத்தமானது - இப்படித் தெரிவித்துள்ளது லங்கா சமசமாஜக் கட்சி

இதுகுறித்து அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு யோசனைக்குப் பரவலான ஆதரவு இருக்கின்றது. ஆனால் ஒரு சில கட்சிகள் செய்யும் பிரசாரங்களால் நாட்டில் இப்போது பதற்றநிலை தோன்றியுள்ளது. அரசுக்குள்ளும் ஒரு ஸ்திரமற்ற நிலையேற்பட்டுள்ளது. எனவே, இவ்விடயங்களில் மக்களின் உண்மை நிலையை அறிந்துகொள்ள பொதுத் தேர்தலொன்றை நடத்துவதே சிறந்த வழி.

இது ஜனநாயக நாடு என்ற வகையில் பொதுமக்களின் தீர்ப்புக்கு நாம் தலைவணங்க வேண்டும். மக்களின் தீர்ப்புக்கு மாறாக யாராலும் செயற்படமுடியாது. நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இப்போது நாம் உள்ளோம். எனவே மக்கள் தீர்ப்பைப் பெறும் வகையில் தேர்தல் ஒன்றை உடன் நடத்துவதே சிறந்த வழி - என்று அக்கட்சியின் ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலுக்குச் செல்வதையே ஐ.தே.கட்சி விரும்புகின்றது

## அதன் பிரதிச் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூன்13

ஆட்டம் கண்டிருக்கும் அரசுக்கு முட்டுக் கொடுக்கும் நிலையில் ஐ.தே.க இல்லை. தேர்தலொன்றுக்கு செல்வதையே அது விரும்புகிறது.

- இப்படிக் கூறுகிறார் ஐ.தே.கவின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. அரசை விட்டு ஜே.வி.பி. வெளியேறும் பட்சத்தில் இந்த அரசு ஆட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நல்லெண்ண அடிப்படையில் உதவுவீர்களா? என்று அவரிடம் கேட்டதற்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

பெரும்பான்மைப் பலம் இல்லாத ஓர் அரசு ஆட்சியில் இருந்தால் உறுதியான முடிவுகள் எவற்றையும் எடுக்கமுடியாது. நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லமுடியாது. எடுக்கும் முடிவுகளில் குடுமிப்பிடிச்சண்டையே ஏற்படும்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இந்த அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒத்துழையாமைப் போக்கு இறுதியில் ஆட்சியே கவிழும் நிலைக்குத்தானே தள்ளியுள்ளது....?

எனவே, நிலையான ஓர் அரசை உருவாக்க வேண்டும் என்பதே ஐ.தே.கட்சியின் நிலைப்பாடாகும்.

தேர்தலொன்று நடத்தப்படும் பட்சத்தில் ஐ.தே.கட்சி பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்று பலம்வாய்ந்த அரசொன்றை நிறுவும். எனவே தேர்தலொன்றை நடத்துமாறு அரசை வலியுறுத்துகிறோம் - என்றார் அவர்.

இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என அறிகிறோம். இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்திப்பாக இருக்கும் எனக் கருதலாமா? - என்று கேட்டதற்கு அவர் கூறியதாவது:-

ஜனாதிபதி எமது தலைவரை அழைத்திருக்கிறார் என அறிந்தோம். பெரும்பாலும் பொதுக்கட்டமைப்புப் பற்றிப் பேசுவதற்காகவே அவர் அழைத்திருப்பார். இதைவிட வேறு எந்த முக்கியத்துவமும் அதில் இருக்காது. இன்று காலை எமது மத்திய குழு கூடும்போது இவ்விடயம் பற்றி ஆராய்வோம். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் வெளிப்படைப் போக்கை அரசு கைக்கொள்ளாமல் விட்டதே இன்று ஏற்பட்டிருக்கும் சிக்கலுக்குக் காரணமாகும் - என்றார் அவர்.

# கல்வி அமைச்சின் சுற்றறிக்கை தமிழ்மொழியிலும் வெளியீடு

அச்சுவேலி,ஜூன்13

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் திருத்தியமைக்கப்பட்ட தீர்மானம் உள்ளடங்கிய சுற்றறிக்கையை தமிழ்மொழியிலும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

சிங்களமொழி மூலமான சுற்றறிக்கை மே மாதம் 19ஆம் திகதி வெளியிடப்பட்டது. தமிழ் மொழியிலான சுற்றறிக்கை மொழிபெயர்த்து வெளியிடுவதில் உள்ள தாமதங்களினால மூன்று வாரங்களின் பின்பு வெளியிடப்பட்டுள்ளது.

சிங்கள மொழியில் மட்டும் சுற்றறிக்கை இருந்ததால் தமிழ்ப்பிரதேசங்களில் ஆசிரியர் சேவைத் தரங்களுக்கு உள்ளீர்ப்பது தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமல் இருந்து வந்தன.

தமிழ்மொழி மூலமான சுற்றறிக்கை வெளியாகியதை அடுத்து ஆசிரியர் சேவைப பதவி உயர்வுகள் மற்றும் சேவைத் தரங்களை மாற்றி அமைத்து உள்ளீர்ப்பது தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறியப்படுகின்றது.

(3-11)

## இரத்த நன்கொடையாளர் தினம் நாளை

யாழ்ப்பாணம்,ஜூன்13

சர்வதேச இரத்த நன்கொடையாளர் தினம் நாளை செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

தேசிய இரத்த மாற்று பிரயோக சேவை இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

இதனையொட்டி யாழ். போதனா மருத்துவமனையில் இரத்ததானம் செய்பவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-7)

# தடைப்பட்ட பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க புலிகளிடம் பொதுக்கட்டமைப்பை வழங்குங்கள்

## புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்13

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட புலிகளிடம் பொதுக் கட்டமைப்பு வழங்கல் முன்னோடி நடவடிக்கையாக அமையும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல்.

இது விடயமாக அவர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பு வருமாறு:-

ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலையேற்றம் வழமையாகிவிட்டது. அதன் மூலம் பொருள்களின் விலைகளும் கட்டண உயர்வுகளும் தாராளமாக ஏற்றப்பட்டு வருகின்றன. இதனால், அன்றாட வாழ்க்கைச் செலவைத் தாஙகமுடியாது மக்கள் திக்குமுக்காடித் திணறி வருகின்றனர். உழைக்கும் மக்கள் எதிர்நோக்கியுள்ள இப்பொருளாதார அவல நிலைபற்றி மௌனம் சாதித்துவரும் ஜே.வி.பியினர், தேசப்பற்றுப் பற்றியும் நாட்டு நலன் பற்றியும் வாய் கிழியக் கத்திக்கொண்டு பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஆர்ப்பரித்து ஆவேசமான பேரினவாத வெறி கிளப்பி வருகின்றனர்.

அதேவேளை, அகிம்சை, தர்மம் பற்றி உபதேசம் செய்யும் பௌத்த பிக்குமார் சுனாமிப் பேரழிவினால் இழப்புகளைச் சுமந்து நிற்கும் வடக்கு - கிழக்கு மக்களுக்குப் புனரமைப்பு புனர்வாழ்வுக்கான பொதுக்கட்டமைப்பு வழங்கப்படுவதை எதிர்த்து இன, மத வக்கிரதுடன் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இதனால், நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு வருவது மட்டுமன்றி இனக்குரோதத்திற்கும், பதற்றத்திற்கும் நாடு தள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய சூழலில், எதிர்ப்புகளைக் கண்டு பின்வாங்காது ஜனாதிபதி ஏற்கனவே உறுதியளித்து வந்ததுபோன்று வடக்கு - கிழக்கிற்கான பொதுக்கட்டமைப்பைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து தோற்றுவிக்க வேண்டும். அதன் மூலம் சுனாமிப் பேரழிவிற்குள்ளான வடக்கு - கிழக்கு மக்களுக்கு வாழ்வளிப்பது மட்டுமன்றி, இடையில் நின்றுபோன இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகளைத் தொடங்குவதற்கும் இப்பொதுக்கட்டமைப்பு வழங்கல் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும் அமைந்துகொள்ளும் என்பதை எமது புதிய ஜனநாயகக் கட்சி வற்புறுத்திக் கூறிக்கொள்கிறது.

ஜனாதிபதி, புலிகள் இயக்கத்துடன் இணங்கி நடைமுறைக்குக் கொண்டுவர முன்வந்திருக்கும் பொதுக்கட்டமைப்பு பற்றி ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் ஆர்ப்பரித்து உண்ணாவிரதமிருப்பது நாட்டைப் பாதுகாப்பதற்கோ மக்களுக்கு வாழ்வளிப்பதற்கோ அல்ல. மீண்டும் யுத்தத்தை மூளவைத்து இரத்த ஆறு ஓடவைப்பதற்கேயாகும். அதன் ஊடாக ஆட்சி அதிகார இடத்தைப் பிடித்து விடலாம் என்ற குறுகிய அரசியல் இலாப நப்பாசையினாலேயாகும். ஒரு வருடமாக ஆட்சியில் பங்குகொண்டு அமைச்சர் பதவிகளும் ஏனைய பதவிகளும் வகித்து வரும் ஜே.வி.பியினர், மக்கள் அன்றாடம் அனுபவித்துவரும் வாழ்க்கை நெருக்கடிகள் பற்றியோ அல்லது நாட்டைக் குட்டிச் சுவராக்கிவரும் தாராளமயம், தனியார்மயம், அந்நிய ஊடுருவல்கள் பற்றியோ வாய்திறக்காது இருந்து வருகிறார்கள்.

ஆனால், சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்கப்படவுள்ள பொதுக கட்டமைப்பை உயிர்களைக் கொடுத்தேனும் தடுத்து நிறுத்தப் போவதாகவும் அவர்கள் சூளுரைக்கின்றனர். ஓரிரு புத்த பிக்குமாரின் உயிர்துறப்பிற்காக பல்லாயிரம் உயிர்களை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் வடக்கு - கிழக்கு மக்களுக்கான பொதுக்கட்டமைப்பு வழங்கப்படுவதை ஜனாதிபதி கைவிட்டுவிடக்கூடாது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் பொதுத்தேர்தல். அடுத்த ஆட்சி அதிகாரம் என பனவற்றைக் குறிவைத்து கலங்கிய குளத்தில் மீன் பிடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயன்றுவரும் சந்தர்ப்பவாதப் போக்கைக கைவிட வேண்டும். பொதுக்கட்டமைப்புப் பற்றி நேரமொரு கதைபேசிவரும் முன்னுக்குப் பின் முரணான போக்கும் கைவிடப்பட வேண்டும்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களுக்கு நேர்மையுடையதாயின் ஜனாதிபதியும் புலிகள் இயக்கமும் இணக்கம் கண்டு வரும் பொதுக்கட்டமைப்பிற்குத் தமது ஆதரவை வழங்கவேண்டும். அவ்வாறு ஆதரவு வழங்குவார்களா என்பதே கேள்வியாகும்.

பொதுக்கட்டமைப்பை வழங்குவதில் ஜனாதிபதி சந்திரிகா உறுதியுடனும் துணிவுடனும் தோன்றியுள்ள எதிர்ப்புகளைக் கடந்து செயற்படுவாரேயானால், இலங்கையின் கறைபடிந்துபோன பேரினவாத அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தித் தனக்குரிய தனித்துவத்தைப் பதிவுசெய்துகொள்வார்கள். இல்லையேல் பழைய பல்லவிக்குப் பலியாகி மீண்டும் யுத்தச் சகதிக்குள் அமிழ்ந்துகொள்ள வேணடிய அவலநிலையே தோன்றும் என்பதைத் எமது கட்சி இவ்வேளை சுட்டிக்காட்டுகின்றது.

எனவே, பொதுக்கட்டமைப்பு வழங்கப்படுவதற்கு இடதுசாரி ஜனநாயக சக்திகளும் சமாதானத்தை விரும்பும் அனைவரும் முழு ஆதரவு வழங்குவது இன்றைய சூழலில் பிரதான கடமையாகும் - என்று அதில் உள்ளது.(எ)

# கல்வியங்காடு சந்தைப் பகுதியில் பலசரக்குக் கடை தீயினால் நாசம்!

## *30 லட்சம் ரூபா பொருள்கள் அழிந்தன*



நல்லூர் பொதுச்சந்தைக்கு முன்பாக - பருத்தித்துறை வீதியில் அமைந்திருந்த வர்த்தக நிலையம் ஒன்று நேற்று அதிகாலை முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகியது. எரியுண்ட கடையின் முகப்புத் தோற்றத்தையும் உள்ளே பொருள்கள் சாம்பல் மேடா கிக் கிடப்பதையும் படங்களில் காணலாம். (படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)

வலி.கிழக்கு, ஜூன்13

நல்லூர் பொதுச்சந்தைக்கு முன்பாக -பருத்தித்துறை வீதியில் - அமைந்திருந்த பிரபல பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்று நேற்று அதிகாலைவேளை தீக்கிரையாகியது.

கடையின் உள்ளே பரவிய தீயினால் அங்கு இருந்த அத்தனை பொருள்களும் எரிந்து நாசமாகிவிட்டன.

கடைக்குள் தீ எவ்வாறு பரவியது என்பது தெரியவில்லை. பழைய கட்டட அமைப்பைக் கொண்ட கடைத்தொகுதியில் இந்தக் கடை அமைந்திருந்தது. கடைக்குள் பரவிய தீ அங்கிருநத எல்லா பொருள்களிலும் பரவி எரிந்துள்ளது.

எனினும், அருகே இருந்த கடைகளுக்கு தீ பரவவில்லை. இதனால், பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. கடைக்குள் நெருப்பு எரிவதைக் கண்ட அயலவர்களும் பாதுகாப்பு ஊழியர்களும் ஏனையோரையும் அழைத்துக்கொண்டு தீயை அணைக்க முயன்றனர்.

யாழ். மாநகர தீயணைக்கும் பிரிவினர் அவசரமாக அழைக்கப்பட்டனர். எனினும், கடைக்குள் பரவிய தீ முற்றாகப் பரவி எரிந்து கொண்டிருந்ததால் எந்தப் பொருள்களையும் மீட்க முடியாமற்போனது.

தீவிபத்துக்கான காரணம் எது என்பது உடடினடியாகத் தெரியவில்லை. நாசவேலை ஏதாவது காரணமாக இருக்கலாமா என்பது பற்றி கோப்பாய் பொலீஸார் விசாரணை செய்கின்றனர். சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயினால் நாசமாகின என்று உரிமையாளர் மதிப்பிட்டிருக்கிறார். (ஐ-180-15)

# அதிபர்களுக்கான சம்பள நிலுவையை வழங்குமாறு கல்வி அமைச்சுக்கு மகஜர்

"மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அதிபர்களுக்கு வழங்கவேண்டிய 1995ஆம், 1996ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான சம்பள உயர்வு நிலுவையை வழங்குவதற்கு கல்வி அமைச்சு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்".

- இவ்வாறு தரமுள்ள அதிபர்கள் சேவை சங்கத்தின் தலைவர் அன்பு ஜவகர்சா கல்வி அமைச்சரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுவிடயமாக அவர் அனுப்பிவைத்துள்ள மகஜரில்:-

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு 1995ஆம், 1996ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு வழங்கவேண்டிய சம்பள உயர்வு நிலுவை வழங்கப்படாமல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனால், பாதிக்கப்பட்ட அதிபர்கள் இருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையீடு செய்திருந்தனர்.

அதிபர்களின் முறையீட்டை ஏற்று விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக் குழு சம்பந்தப்பட்ட அதிபர்களுக்குச் சம்பள நிலுவை வழங்கப்படவேண்டும் என கல்வி அமைச்சிற்கு சிபார்சு செய்து தீர்ப்பு வழங்கியிருந்தது.

எனவே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய சிபார்சின் அடிப்படையில் குறிப்பிட்ட ஆண்டுக்கான சம்பள நிலுவை சகல அதிபர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# வடக்கு – கிழக்குப் பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்13

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர்களின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் வீடமைப்பு, நிர்மாணம், கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சருமான பேரியல் அஷ்ரப்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் ஒன்று கடந்த 31ஆம திகதி கல்வி அமைச்சில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் அங்குள்ள பாடசாலைகளில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை உரிய முறையில் இனங்காணப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தொண்டர் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் கஷ்டப் பிரதேசம், அதிக கஷ்டப் பிரதேசம எனப் பாகுபடுத்தாமல் கடைசி மூன்று வருட கால சேவையை அடிப்படையாக வைத்து நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல், இன்று வடக்கு - கிழக்கில் சுமார் 860 ஆங்கில ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரிகின்றனர். இவர்களை பாடசாலைகளில் நிலவும் பற்றாக்குறைக்கேற்ப - அவரவரின் கல்வித் தகைமைகளை அடிப்படையாக வைத்து - பாடசாலைகளில் நியமனம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி அமைச்சரவையில் பெறப்படும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக உள்ளவர்களின் பிரச்சினையும் கவனத்தில் எடுக்கப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் அறியப்படடு அவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அத்துடன், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணப் பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் கடற்கரையில் இருந்து 200 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசப் பாடசாலைகளுக்குப் புதிய காணிகள் பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயலாளர் மற்றும் மத்திய கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-203)

# ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

தேவகௌரி லிங்கராசா (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வித்தி), புஸ்பராசா சிந்துஜா (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம. வித்தி.), அம்பிகைபாலன் ரமா (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வித்தி).

**கனிஷ்ட பிரிவு**

ம.மேரி டிஷானி (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வித்தி), மதுஷா சந்திரதாஸ் (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வித்தி.), விஜயேந்திரன் மேகலா (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வித்தி.).

**கவிதை (திறந்தபோட்டி)**

ஞானபாஸ்கரன் யூடிற்சஜானா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வித்தி.), வெரோணிக்கா யேசுதாசன் (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வித்தி.) அன்ரனி டிக்சன் (ஊர்காற்றுறை புனித மரியான் றோ.க.வித்தி.)

**சிறுகதை (திறந்த போட்டி)**

வ.கஜநந்தினி (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வித்தி.), யோகானநதம் சிசிலி (கரம பொன் சிறிய புஸ்ப மகளிர் ம. வி), ம.அனுசியா (தையல பயிற்சி நிலையம், ஊர்காவற்றுறை).

**சித்திரப் போட்டி (கனிஷ்ட பிரிவு)**

மகேஸ்வரன் மயூரி (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.) டெ.அ. றோஜினி (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வி.), அன்ரன் மரிய தாஸ் அனற்ந|றோஜா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.), மு.யோக தீபன் (தம்பாட்டி அ.த.க. பாடசாலை).

**சிரேஷ்ட பிரிவு**

இ.தயாளினி (கரம் பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.), பெ.சுதர்சினி (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.), க.பிரியதர்சினி (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.).

**திறந்தபோட்டி**

யோ.லின்ரன் ஜதீஸ் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), அஞ்சலி சுஜீவா பஞ்சநாதன் (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வி.), கு.குஜேந்தி (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வி.), டா.ரூபன் நாரந்தனை றோ.க.வித்தி.).

**குறுநாடகம் (திறந்தபோட்டி)**

திருமதி கஜநந்தினி வரதலோஜன் (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.), கிருஷ்ண பிள்ளை மாதவி (நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறை), அ.பஸ்னா (நாரந்தனை றோ.க.ம.வி.).

**நாட்டுப்புறப்பாடல் (கனிஷ்டபிரிவு)**

மேரிடிலானி (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வி.), நிரோஜினி அருளப்பு (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.), மேரியுசி பத்திமா நப்பியேல் (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வி.)

**சிரேஷ்ட பிரிவு**

மேரிவேர்ஜினி சூசைப்பிள்ளை (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.), நிஷாந்தினி கோமேஸ்வரன் (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.), அ.மேரிகொன் செப்ரா (ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.வி.)

**திறந்தபோட்டி**

இராஜகோபால் அனுசியா (கோத்திக்குளம் கிழக்கு, ஊர்காவற்றுறை), பி.கிருபானந்தி (ஊர்காவற்றுறை), திருமதி ஜெ. பரமேஸ்வரன் (கரம பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.). (எ)




# மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



செல்வன் விஜயரத்தினம் ஹரிகரன்

13.06.2005

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த **விஜயரத்தினம் - விஜயகலா** தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் செல்வன்

**விஜயரத்தினம் ஹரிகரன்** அவர்கள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை தனது மூன்றாவது பிறந்த நாளை அன்புத் தங்கை துஷ்யந்தியுடன் தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அன்பு அப்பா, ஆசை அம்மா, அப்பம்மா, ஐயா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார், மச்சான்மார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஹரிகரனை, இமையாணன் ஸ்ரீமுருகப்பெருமான் அருள்பெற்று சீருஞ்சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் :
**திரு. திருமதி விஜயரத்தினம் - விஜயகலா**
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
(36490)(61-14-11-42)

## முன்னாள் துணைவேந்தரின் நினைவுதினம்

யாழ்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் அ.துரைராஜாவின 11 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், தமிழீழ விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-204)

## கெயர் சர்வதேசம்

care

**ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான**

**கேள்விப்பத்திரம் கோரல்**

கெயர் நிறுவனத்தால் பருத்தித்துறை பிரதேசத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள கட்டுமான வேலைக்காகத் தொழிலாளர்களிடம் (மேசன், தச்சுத்தொழிலாளர்) இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கும் பருத்தித்துறையில் உள்ள கெயர் அலுவலகத்துடன் கடமை நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

இதற்கான விண்ணப்பங்களை 20.06.2005இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பருத்தித்துறை கெயர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**திட்டப்பணிப்பாளர்,**
**கெயர் சர்வதேசம்,**
**சாரையடி,**
**பருத்தித்துறை.**
**தொலைபேசி 021 2264259**
**தொலைநகல் 021 2264260.**

(சி/43367)(43-14-45)

## யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

## 637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## 83ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா

## போட்டிகள் - 2005

**மேற்படி விழாவையொட்டி யா.மா.சி.க.வ.கூ.சங்கங்களின் சமாசம் பின்வரும் போட்டிகளை நடத்துகின்றது.**

**01.அ. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப்போட்டிகள்:-**

| ஆண்டு | நேரம் | விடயம் |
|---|---|---|
| 6.7.8 | (5-6) நிமிடங்கள் | பின்வரும் கூட்டுறவுப் பெரியார் ஒருவரைப் பற்றியது<br>1. அமரர் வி.வீரசிங்கம்<br>2. அமரர் சண்முகம் ஞானப்பிரகாசர்<br>3. அமரர் வேதவல்லி கந்தையா |
| 9.10.11 | (5-7) நிமிடங்கள் | கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு ஐக்கியநாணய சங்கம் அளப்பரிய சேவையாற்ற முடியும். |

மேற்படி போட்டிகள் பிராந்திய ரீதியில் (உதவி அரசாங்க அதிபர் பிரிவு) நடத்தப்பட்டு பின்னர் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும்.

**ஆ. பேச்சுப் போட்டி ஆண்டு 12.13 (6-7) நிமிடங்கள் கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் முதுகெலும்பாக சிக்கன சேமிப்புக் கூட்டுறவு சங்கங்கள் திகழமுடியும்.**

**இ.கட்டுரைப்போட்டிகள்:-**

| ஆண்டு | நேரம் | விடயம் |
|---|---|---|
| 6.7.8. | 45 நிமிடங்கள் | நான் கண்ட சிக்கன சேமிப்பு கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் |
| 9.10.11 | 45 நிமிடங்கள் | கிராம மட்ட நிறுவனங்களில் சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் தலைசிறந்ததாகும். |
| 12.13 | ஒரு மணித்தியாலம் | எமதுபிரதேச மக்களின் சேமிப்பைத் திரட்டி சுதந்திரமான பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதற்கு யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சிறந்த ஓர் ஊடகமாகும். |

ஆண்டு 12.13 மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும். போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தங்கள் பாடசாலை ஊடாகத் தாங்கள் படிக்கும் ஆண்டை உறுதிப்படுத்தி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**2. சி.க.வ.கூ. சங்கங்களுக்கிடையிலான போட்டிகள்:**

இப்போட்டிகள் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும்
அ. நாடகப் போட்டி (அங்கத்தவர்களுக்கானது)
ஆ. சிறுவர்களுக்கான கிராமிய நடனம் (அங்கத்தவர்கள் அல்லாதவர்கள்) - வயது 10 தொடக்கம் 17 வரை)
இ. பாலர் பாடசாலை சிறுவர்களுக்கான குழுநடனம்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றுவோர் தமது விண்ணப்பங்களை சி.க.கூ.சங்கங்களுக்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**3.பிராந்திய சபைகளுக்கிடையிலான போட்டிகள்:**

1. ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி
2. பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி
3. பெண்களுக்கான சங்கீதக் கதிரை

இவ்விண்ணப்பங்களை சி.க.கூ.சங்க பிராந்திய சபைகள் உறுதிப்படுத்தி அனுப்பிவைத்தல் வேண்டும்.

போட்டியில் பங்குபெற விரும்புபவர்கள் விண்ணப்பத்தை,

**மாவட்டச் செயலாளர்,**
**யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூ.ச.சமாசம்,**
**637, கே.கே. எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி 17.06.2005. மேலதிக விவரங்கள் பெற விரும்புவோர் **சி.க.வ.கூ.சங்கங்களிலும், பிராந்திய சபையிலும், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**637, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மாவட்டச் செயலாளர்.**

(சி/43371)(42-14-45)


துரு பிடிக்காத உருக்கிலான கிட்ச்சன் சிங்க்

PRINCE "பிரின்ஸ்"

STAINLESS STEEL KITCHEN SINK



நீண்டகால பாவனைக்கு
இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் கிட்ச்சன் சிங்க்

ஏக விநியோகஸ்தர்கள்
செண்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
524 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 112324261, பெக்ஸ் 112446554

நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடமும் கிடைக்கின்றன.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 |  | 14 |
| – | | – |
| 07 | | 05 |
| – | | – |
| 1937 | | 2005 |

## அமரர் பொன்னையா சீவரத்தினம்

**மனிதருள் திலகமாய் மாணிக்கமாய் விளங்கி**
**புனிதவாழ்வு வாழ்ந்து புவிவிட்டு மறைந்தீரோ? – உங்கள்**
**ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.**

இன்று (13.06.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'சிவமஹால்',*
*அல்வாய்தெற்கு,*
*வதிரி.*

**- குடும்பத்தினர்.**

(36484)(42-14-45)

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஆளும் வர்க்கமும் அதிகார வர்க்கமும்

*"இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செயவதற்கான நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படும் தறுவாயில் உள்ளன. இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் இரு நாடுகளும் உறுதியாகவே இருக்கின்றன."* - இவ்வாறு கொழும்பில் வைத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் அறிவித்திருப்பது ஈழத் தமிழர்கள் தரப்பிலும, அவர்களின் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் தென்னிந்தியத் தலைவர்கள் மத்தியிலும் பெரும் விசனத்தையும், எரிச்சலையும், சீற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு வான் பாதுகாப்புக் கட்டமைப்பு கிடைக்கவிருப்பது பற்றிய தகவலும் அமைச்சர் நட்வர் சிங்கின் கொழும்பு விஜயத்தையொட்டி வெளிப்பட்டு அரசியல் வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியிருக்கின்றது.

*"தென்னிலங்கை சிங்கள அரசைத் திருப்திப்படுத்துவதற்காக கொழும்பில் வரம்பு மீறிப் பேசியிருக்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்."* - என்று வெகு காட்டத்துடன் கூறியிருக்கின்றார். நட்வர்சிங் அங்கம் வகிக்கும் இந்திய மத்திய அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ.

இந்திய - இலங்கை இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் நிச்சயமாக ஏற்படாது என்றும், இந்தியா அப்படி ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாது என்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமக்கு எட்டு மாதங்களுக்கு முன்னரே நேரில் உறுதிமொழி வழங்கியிருந்தார் எனவும், அதற்கு முரணாக வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் கொழும்பில் கருத்து வெளியிட்டமை துரதிர்ஷ்டவசமானவை எனவும் ஈழத் தமிழ் அபிமானியான வைகோ தெரிவித்திருக்கின்றார்.

இந்த விடயம் குறித்து காட்டமான எதிர்ப்பை வைகோவும், ஏனைய தென்னிந்தியத் தலைவர்கள் பலரும் காட்டுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விடயத்தில் இந்திய அரசியல் தலைமைகள் என்ன முடிவை எடுத்தாலும் இந்திய அதிகார வர்க்கம் தொடர்ந்தும் ஈழத் தமிழர்களைக் குரோத மனப்பான்மையோடு பார்த்து, அவர்களுக்கு எதிரான போக்கை இந்தியப் பக்கத்திலிருந்து வெளிப்படுத்த வைப்பதில் முனைப்போடு நிற்கின்றது என்பதை இப்பத்தியில் ஏற்கனவே தொடர்ந்து பல தடவைகள் சுட்டிக்காட்டிவந்துள்ளோம். அதன் வெளிப்பாடே கொழும்பில் நட்வர் சிங் அளித்த தகவலும் ஆகும்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மேற்படி சர்ச்சைக்குரய கருத்துகளை கொழும்பு ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டார். அங்கு ஊடகவியலாளரின் ஒவ்வொரு கேள்வியின்போதும், அமைச்சருக்கு அருகில் இருந்த அவரது அமைச்சின் செயலாளர் ஷியாம்ஷரன், அவரின் காதோடு காதாக கருத்துகளைக் கூறி, அமைச்சரின் பதில்களுக்கு அவரை உரியமுறையில் வழிநடத்திக்கொண்டிருந்தார் என்பது செய்தியாகவே வெளியாகிச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மத்திய அரசின் பங்காளிக் கட்சித் தலைவரான வைகோ, தமது கூட்டமைப்பு அரசின் பிரதமருடன் பேசி ஓர் உறுதிமொழியைப் பெற, அதற்கு மாறான கருத்தை அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் இன்னொரு நாட்டின் தலைநகரில் போய்க் குந்திக்கொண்டிருந்து அறிவிப்பதற்கு இப்படி இடைநடுவில் புகுந்து விளையாடும் அதிகார வர்க்கத்தின் விருப்பு - வெறுப்புகள்தான் முக்கிய காரணம்.

ஈழத்தமிழர்கள் விடயத்தில் இந்திய அரசின் போக்கும், கொள்கையும், செயற்பாடும் மாறாமல் ஒரே மாதிரியாகவே இருந்தன, இருக்கின்றன, இருக்கும் என்றெல்லாம் புதுடில்லியில் கூறப்பட்டாலும் -

ஜி.பார்த்தசாரதி, ரொமேஷ் பண்டாரி, வெங்கடேஸ்வரன், கே.என்.டிக்ஸிற் என்று புதுடில்லியில் இலங்கை விவகாரத்தைக் கையாளும் அதிகார வர்க்கப் பிரதிநிதிகள் மாறும்போதும் அவர்களின் எண்ணங்களுக்கேற்ப கொள்கைப் போக்குகளும் மாறின என்பதுதான் உண்மை.

இயல்பாகவே ஈழத் தமிழர்பால் பற்றும், பாசமும், பிடிப்பும் கொண்ட பிரதமர் இந்திராகாந்தியின் காலத்தில் அவரது விசேட ஆலோசகர் ஜி.பார்த்தசாரதி இலங்கை விடயத்தைக் கையாண்ட முறைக்கு முற்றிலும் முரணாகப் பின்னர் வந்த பிரதமர் ராஜிவ்காந்தியை அவரது வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி வழிநடத்தினார் என்பது பகிரங்க இரகசியம்.

அதுபோலவே இப்போதும் புதுடில்லி அதிகார வர்க்கம் தனது கைவரிசையைக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

இந்திய மத்திய கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சி ஒன்று கூட்டமைப்பு அரசின் தலைவரான பிரதமர் மன்மோகன்சிங்குடன் உடன்பாடுகண்டு, ஒரு தீர்மானத்தை எடுத்துவைத்திருக்க, அந்தப் பங்காளித் தரப்புக்குத் தெரியாமல் - அந்த முன்னைய முடிவுக்கு மாறான, முரண்பாடான - தீர்மானம் ஒன்றை அயல்நாட்டில் போயிருந்து வெளிவிவகார அமைச்சரைக் கொண்டு வெளியிடவைக்கும் கைங்கரியத்தை இந்த அதிகார வர்க்கமே ஒப்பேற்றுகின்றது.

ஈழத்தமிழர் தாயகத்தை இராணுவத் துருப்புகளை அனுப்பி ஆக்கிரமிக்க வைக்கும் முடிவுக்கும், அதன் மூலம் இந்திய - ஈழத் தமிழர் தரப்புகளிடையே நீண்டகாலக் கசப்புணர்வு ஏற்படவைக்கும் நிகழ்வுக்கும் களம் அமைத்து, வழிப்படுத்தியது இதே அதிகார வர்க்கம்தான்.

இந்திய அரசியல் தலைமை இந்த ஆளும் வர்க்கத்தின் வலையில் வீழ்ந்து, அதன் கைப்பொம்மையாகுமானால், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது நட்பு சக்திகளையே - சகோதரங்களையே - இந்தியா எதிரிகளாக்கிக் கொள்ளும் துரதிர்ஷ்டம் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இலங்கை விவகாரத்தில் இந்திய ஆளும் வர்க்கம் (Political Leadership), தனது அதிகார வர்க்கம் (Bureaucracy) குறித்து அதிகம் கவனமாக இருப்பது இரு தரப்பு உறவுகளுக்கும் நல்லது.



கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் இளைஞர்களின் இறுதிஅஞ்சலி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் குருநகரில் நடைபெற்றன. குறித்த இளைஞர்களது பூதவுடல்கள் தாங்கிய பேழைகள் அடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படுவதையும், உயிரிழந்த இளைஞர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் குருநகர்ப் பகுதிக் கடைகள் பூட்டப்பட்டு வெறிச்சோடிக் கிடப்பதையும் படங்களில் காணலாம். (எ-7-51)

## குருநகர் இளைஞர்களின் படுகொலை குறித்த விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரிக்கை

குருநகர்,ஜூன்13

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு அருகில் சுட்டுக்கொல்லப்பட்ட குருநகர் இளைஞர்களின் கொலைபற்றிய விசாரணையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடம் குருநகர் பொதுமக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பான மகஜர் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி இளைஞர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வின்போது பொதுமக்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகப் பொதுமக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குருநகர் இளைஞர்களான பிரான்சிஸ் றெனிசியஸ், தேவதாஸ் இம்மனுவல் ஆகிய இருவரும் கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி கொலைசெய்யப்பட்ட துயரச் சம்பவத்தைத் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். அவர்கள் இருவரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் தமது ஆராதனையைச் செலுத்தச் சென்றுள்ளனர். அபபோது அந்த ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு அடுத்த பஸ் நிலையத்திற்குச் சென்றுள்ளனர். அப்போது இனந்தெரியாதோரால் இவர்கள் சுடப்பட்டுள்ளனர்.

கனடாவிலிருந்து வருகை தரவுள்ள தனது எதிர்கால மனைவியை அழைத்து வருவதற்காகத் தனது மைத்துனன் தேவதாஸ் இம்மனுவலுடன் பிரான்சிஸ் றெனிசியஸ் கொழும்புக்குச் சென்றபோது இத் துயரச் சம்பவம் அவர்கள் இருவருக்கும் நேர்ந்துள்ளது.

குருநகர் மக்களாகிய நாம் இந்த இரு இளைஞர்களதும் இறுதிஅஞ்சலி நிகழ்வில் அமைதியாகக் கலந்துகொண்டு இவர்களது அநியாயப் படுகொலைகளுக்கு எமது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகள் வளர்ந்துவருவதை நாம் அறிகிறோம். எனவே, இந்த அப்பாவி இளைஞர்கள் இருவர்களது அநியாயப்படுகொலைகள் தொடர்பாக உடனடியான நீதி விசாரணை ஒன்றுக்குக் கட்டளையிட்டு நீதிகிடைப்பதைத் துரிதப்படுத்துமாறு தங்களைக் கோருகின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-51)

## வீதி திருத்தப் பணிகளில் ரயர் பயன்படுத்தத் தடை

கொக்குவில்,ஜூன்13

வீதித் திருத்தப் பணிகளில் தாரினை உருக்குவதற்கு ரயர்களைப் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்திச் சபையின் பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரி சபைகளின் நிறைவேற்றுப் பொறியியலாளர்களுக்கே இதுவிடயமாகக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

வீதி திருத்தப்பணிகளின் போது, தாரினை உருக்க ரயர்களைப் பாவிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வீதி திருத்தப் பணிகளின்போது தும்பு மட்டைகளை மட்டுமே பாவிப்பதற்கான உத்தரவு ஏற்கனவே நடைமுறையிலுள்ளதோடு, தேவையான அளவு தும்பு மட்டைகளும் வழங்கப்பட்டும் வருகின்றன.

எனவே, நேரடித் தொழிலாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைகளில் எக்காரணம் கொண்டும் ரயர்களைப் பாவித்தலாகாது.

ஒப்பந்தக்கரார்கள் மேற்கொள்ளும் வேலைகளில் ரயர் பாவிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரர்கள் வீதித்திருத்தப் பணிகளுக்கு ரயர்களைப் பாவிக்கக் கூடாதென ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இது மீறப்படுகிறது. இதனைத்தடுக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவும்.

மேலும், வீதியில் பரவப்படும் மணல் அதிகளவு தூசியினை ஏற்படுத்துவதாலும் சுற்றுப்புறச்சூழல் மாசடைவதாலும் அதனைக் குறைக்கும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-76)

## ஆசிரிய ஆலோசகர் தெரிவு 26ஆம் திகதி போட்டிப்பரீட்சை

அச்சுவேலி,ஜூன்13

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் ஆலோசகர் பதவிக்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவட்ட ரீதியாக ஐந்து பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள 24 கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரியர் ஆலோசகர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு போட்டிப்பரீட்சை நடத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், விண்ணப்பமும் கோரப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்திற்கான பரீட்சை நிலையம் யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் அமையும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த வருடம் ஆசிரியர் ஆலோசகர் பதவிக்கான பரீட்சை நடைபெறுகின்றது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த மேற்படி பரீட்சை, வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அன்றையதினம் நடைபெற்ற ஹர்த்தால் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டமை தெரிந்ததே. (எ-11)

## ஆறு.திருமுருகன் அமெரிக்காவுக்கு ஆன்மீகப் பயணம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நேற்றுமுன்தினம் அமெரிக்காவிற்கு ஆன்மீகப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அங்கு நடைபெறும் பல்வேறு விழாக்களில் கலந்துகொள்ளவே இவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இன்று புளோரிடா மாநிலத்தில் நடக்கும் ஆன்மீக விழாவிலும் -

எதிர்வரும் 22 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் திருவாசக விழாவிலும் -

அடுத்த மாதம் 3 ஆம் திகதி கலிபோர்னியாவில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டிலும் இவர் கலந்துகொண்டு ஆத்மீக உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து பலர் அமெரிக்கா சென்றுள்ளனர். (எ-203)

## இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இந்தியக் கலைஞரின் வில்லிசை

யாழ்ப்பாணம்,ஜூன்13

தென்னிந்தியாவில் இருந்து வருகை தரும் வில்லிசைக் கலைஞர் கலைமாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினர் வழங்கும் ஆன்மீக வில்லிசை நிகழ்ச்சி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அகில இலங்கை சத்யசாயி மன்றங்களின் ஏற்பாட்டில் இந்த வில்லிசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

'பகவானின் வாழ்வும் போதனைகளும்' என்னும் தலைப்பில் வில்லிசை இடம்பெறும்.

கலைஞர் சுப்பு ஆறுமுகத்துடன் திருமதி பாரதி திருமகன், பேராசிரியர் திருமகன், காந்தி, பசவராஜ் வெங்கட கணேஷ் ராவ் ஆகியோர் வில்லிசைக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

சத்தியசாயி சேவா நிறுவனங்களின் வடபிராந்திய இணைப்புக் குழு இந்த வில்லிசை நிகழ்வுக்கான ஏற்பாடுகளை இங்கு மேற்கொண்டுள்ளது. (ஐ)

### நாளை

*வைகாசி 31*

*செவ்வாய்க்கிழமை*

*14.06.2005*

*திதி : ஸப்தமி*

*பிற்பகல் 3.12 வரை*

*நட்சத்திரம் : பூரம்*

*முன்னிரவு 09.34 வரை*

*சுபநேரம் : 10.23 - 11.53*

*ராகுகாலம்: 02.53 - 04.25*

*(யாவும் பழைய நேரப்படி)*

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம்

கொக்குவில்,ஜூன்13

கலாபூஷணம் விருது வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுவிடயமாக, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் யாழ். மாவட்ட செயலகத்துக்குக் கடிதம் ஒன்றையும் மாதிரி விண்ணப்பப்படிவங்களையும் அனுப்பிவைத்துள்ளார்.

மேற்படி விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் தத்தமது பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்றவற்றில் ஈடுபட்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் கலாபூஷணம் விருதுக்காக விண்ணப்பிக்கமுடியும். (எ-76)

### உதயவாக்கு

**குணத்தில் மிக உயர்ந்தவர்களும் அடிமட்டத்தில் இருப்பவர்களும் மாறவே மாட்டார்கள்.**

**- சீங்செள**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்விப் பத்திரம்
### விடைப்புத்தகங்கள், விடைத்தாள்கள் அச்சிடுதல்

விடைப் புத்தகங்கள்/ விடைத்தாள்கள் அச்சிடுவதற்கு அனுபவம் உள்ள அச்சகரிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **விடைப் புத்தகங்களின் எண்ணிக்கை** | 50,000 புத்தகம் |
| **விடைப் புத்தகங்களின் பக்கங்கள்** | 12 பக்கங்கள் |
| **விடைத்தாள்களின் எண்ணிக்கை** (தனித்தாள்கள்) | 1,00,000 |
| **அளவு** | 30 செ.மீ. 22செ.மீ. |
| **காகிதாதி வகை** | 70கிராம் கென்யோபாங்க் |

1. கேள்விகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளர்/ வழங்கல் பகுதியில் தொடர்பு கொண்டு மாதிரியைப் பார்வையிடலாம்.
2. கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிப்போர் மீளளிக்கப்பட முடியாத வைப்புப் பணமாக ரூபா 250.00 ஐயும் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5000.00 ஐயும் பல்கலைக்கழகக் காசாளரிடம் செலுத்தி. அதற்கான பற்றுசீட்டுடன் கேள்விப் பத்திரங்களை 23-06-2005 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நிதியாளர் அறையிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திர கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விடைப்புத்தகங்கள் அச்சிடுதல் UJ/SK/T/05/05 என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரதாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

தலைவர்,
**கேள்விப்பத்திர சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C/43336)(46-14-45-26)

# வில்லிசை நிகழ்வு

குடத்தனை,ஜூன்13

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் அவதார மகிமையை எடுத்துக்கூறும் வில்லிசை நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு பருத்தித்துறை சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புட்டபர்த்தியிலிருந்து வரும் வில்லிசைக் குழுவினரே இந்த வில்லிசையை நடத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(3-78)

## பெண் வேலையாள் தேவை

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. நேரில் வரவும்.

**த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்**
21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2826.
(சி-43356)

## அனைத்துப் பிரசுர நிறுவனங்களுக்கும்

எம்மிடம்,
1) White - Demmy Paper (Norway) - 48.8GSM (N/Print)
2) White - Demmy Paper (Stora) - 48GSM (N/Print)
3) Duplicating Paper
4) Colour Demmy Paper

போன்ற கடதாசி வகைகள் எம்மிடம் உள்ளன. நீங்கள் அணுகவேண்டிய தொலைபேசி இலக்கம். S.மயூரன் 0777 - 737284.
(36497)

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள், விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளிப் பகுதியில் மாடி வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: திட்ட முகாமையாளர்,
**புறோ மோட்டேர்ஸ்**
**என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,**
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ. இல. 021 222 5780.
(சி-43354)

# மீண்டும் உற்பத்திகளை ஆரம்பித்துள்ளோம்

# நொர்தேண் இண்டஸ்ரீஸ்

ரயர் நிரப்புநர்களும்
சைக்கிள் ரயர், ரியூப் உற்பத்தியாளர்களும்

69, பிறவுண் வீதி, கொக்குவில்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 03 - 1962
மறைவு 18 - 05 - 2002

திருமதி
**ஸ்ரீஸ்கந்தராசா-அருந்ததி-புஸ்பம்**

திதி: 13. 06. 2005

ஆண்டுகள் மூன்று மறைந்தோடிப் போனாலும்
உன் திருவுருவம் எம் மனதை விட்டு நீங்காது
பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த செல்வமே – உங்கள்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

சிவன் வீதி,
உருத்திரபுரம்.

குடும்பத்தினர்.
(35460) (54-11-17)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 686 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 10-6-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5475468-5489972 |

லக்கினம் சிங்கம்

வெற்றி இலக்கங்கள்
**20 26 45 47**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,17,856 | 10/- | 31,78,560/- |
| 2.இலக்கங்கள் | 29,151 | 20/- | 5,83,020/- |
| 1.இல லக்கினம் | 28,685 | 30/- | 8,60,550/- |
| 2.இல லக்கினம் | 2,679 | 100/- | 2,67,900/- |
| 3.இலக்கங்கள் | 786 | 500/- | 3,93,000/- |
| 3.இல லக்கினம் | 70 | 5,000/- | 3,50,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 3,79,237 | - | 80,85,280/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 80,55,280/- தொடர் இல. 4536666 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மே 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5478684-3-09
5478577-1-59
5486829-9-18
5485801-5-93
5480774-9-03

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## தேரேறி அருள் தருவாய்!

பாசெய்யும் பாசூரின்
கடலோரக் கரைதனிலே
கடலலைகள் தாலாட்ட
காவலனாய் அமர்ந்தவனே!

ஆனி பிறந்து விட்டால்
ஆனந்தம் எங்களுக்கு
விழாக்கோலம் பூண்டுவிடும்
உலாப்போகும் உன்பாதை!

அந்தோனி உன்நாமம்
அடியார்கள் உச்சரிப்பர்
உன்மேனி தழுவிடவே
எம்மேனி துடித்துநிற்கும்!

அலங்காரத் தேரினிலே
அழகுடனே பவனிவந்து
அடியார்கள் எம்மீது
அருள்மாரி பொழிந்திடய்யா!

**ஏ.விஜயன்,** பாசையூர்.
(36466) (39-14-45-26)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தறித்த தேக்கு / வாகை மரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன.

**நாள்:** 23-06-2005 வியாழக்கிழமை
**நேரம்:** முற்பகல் 10.30 மணி
**இடம்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஏலவிற்பனைக்குரிய மரத்தைப் பார்வையிட விரும்புவோர் 16.06.2005 - 22.06.2005 வரை அலுவலக நேரத்தில் சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) அவர்களுடன் தொடர்புகொண்டு பார்வையிடமுடியும்.

ஏலத்தில் வெற்றி பெறுபவர் அதற்கான முழுப்பணத்தையும் உடனடியாகச் செலுத்தவேண்டும். மரத்தினை அன்றையதினமே எடுத்துச்செல்லவேண்டும். கால அவகாசம் தேவைப்படுவோர் சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

– **பதிவாளர்.**
(C/43337)(46-14-45-26)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 12 - 1933
மறைவு 07 - 04 - 2004

**பொன்னையா சிவசுப்பிரமணியம**



தோற்றம் 01 - 04 - 1917
மறைவு 25 - 05 - 2004

**பொன்னையா நாகரத்தினம்**

ஓராண்டு சென்றாலும் தீராத வேதனையால்
தினம் தினம் துடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

இளந்தாரி கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

- குடும்பத்தினர்.
(36474) (39-14-45-26)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 13.08.1993
மறைவு : 13.06.2004

ஓராண்டு ஓடி மறைந்ததம்மா
தயாக்குட்டியே
ஓடிவா எம்மிடத்தில்
ஒட்டி நாம் உறவாட
தயா என்றழைக்கும்
தங்கக் குரல் ஓயவில்லை
எங்கம்மா சென்றுவிட்டாய்
ஏங்குகின்றோம்
உன்நினைவால்---

செல்வி
**குமாரசாமி நிஷாளினி (தயா)**

சி.குமாரசாமி,
கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

அப்பா, அம்மா,
அண்ணன்மார்,
அக்கா.
(C/43291)(51-11-14)

# தொழிலாளர்களின் பொறுப்புகள் குறித்து தொழில் ஆணையாளரின் ஆலோசனைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

தொழில் வழங்குநர் மற்றும் தொழிலாளர்களின் பொறுப்புகள், கடமைகள் தொடர்பாக யாழ். பிராந்திய தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

அந்த அறிவுறுத்தல்களில் தொழிலாளர்களின் பொறுப்புகள், கடமைகள் தொடர்பான விவரங்கள் இவ்வாரம் வெளியாகின்றன.

அவை வருமாறு:-

★ சேவை ஒப்பந்தத்திற்கு இணங்க நடந்துகொள்ளுதல் வேண்டும்.

★ பொதுவான சட்டப் பிரமாணங்களுக்கு இணங்க நடந்துகொள்ளுதல் வேண்டும்.

★ தினந்தோறும் தொழிலுக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

★ குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே தொழிலுக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

★ மிகவும் கவனத்துடன் கடமைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

★ உற்சாகத்துடன் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

★ தொழில் வழங்குநரின் அல்லது அவரின் பணிப்புரைகளுக்கமைய நடந்துகொள்ளுதல் வேண்டும்.

★ தொழில் வழ்ங்குநரின் சொத்துகளைத் திருடக்கூடாது.

★ தொழில் வழங்குநருக்கு நேர்மையான விதத்தில் சேவை செய்தல் வேண்டும்.

★ சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் சேவை நிலையத்தினுள் மது போதையில் இருத்தல் கூடாது.

★ அறிந்துகொண்டு வேண்டுமென்றே ஒழுங்கு தவறிநடத்தல் கூடாது.

★ நுகர்வோருடன் அல்லது வாடிக்கையாளருடன் ஒழுங்கீனமாக நடந்துகொள்ளக் கூடாது.

★ தாபனத்திற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துகளை வெளியிடுதலோ அல்லது நடந்து கொள்ளுதலோ கூடாது.

★ தொழில்தருநருக்கு வஞ்சனை எண்ணத்தை மனதில் வைத்து விவரங்களைச் சமர்ப்பிக்காது விடுதல் கூடாது.

★ தொழில் வழங்குநரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது தாபனத்தினுள் பிரசுரங்களை வெளியிடுதல் கூடாது.

★ வேலைத்தளத்தில் சுத்தத்தினைப் பேணுவதற்குத் தவறக்கூடாது.

★ தாபனத்தின் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

★ புகைத்தல் தடை செய்யப்பட்டிருப்பின் அவ்விடத்தில் அதற்குகந்தவிதமாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

★ தாபனத்தின் உற்பத்திக்கு அல்லது சேவைக்கு ஊறுவிளைவிக்கும் வண்ணம் அல்லது குறைவடையும் வண்ணம் நடந்து கொள்ளுதலோ அல்லது அத்தகைய செயல்களுக்குத் துணைபோதலோ கூடாது.

★ தொழில் வழங்குநரால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உபகரணங்களைத் தொழிலாளர் எல்லோரும் பயன்படுத்துதல் வேண்டும்.

★ சட்டத்திற்கு முரணான விதத்தில் வேலை நிறுத்தங்களை ஒழுங்குசெய்தலோ உற்சாகமூட்டுதலோ அல்லது நடத்துதலோ கூடாது.

★ தொழில் நியாய சபைகளின் தீர்ப்புகள் கைத்தொழில் நீதிமன்றுகளின் தீர்ப்புகள் என்பவற்றை மாற்றுமாறுகோரி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

★ விசுவாசமாகவும் திறமையாகவும் சேவைகளை வழங்குதல் வேண்டும். (3-202)




# கைத்தொழில் முயற்சிகள் குறித்த அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில்

குடாநாட்டில் நடுத்தர மற்றும் சிறிய கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கான ஊக்கம் அளிக்கும் வகையில் அறிமுக நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணத்தில் கடந்த 10ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்று முகாமையாளர் மார்க் வான் ஸ்ரீன்விக் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.




இதில் வர்த்தகர்கள், வங்கியாளர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம் (SLBDC), கைத்தொழில் சேவைகள் பணியகம்(ISB), சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்தி சேவைகள் நிறுவனம் (SEEDS) ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள வர்த்தக வலையமைப்பின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படக்கூடிய சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.


இலங்கை அரசினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் ஓர் இணைந்த செயற்றிட்டமான இந்த வலையமைப்பின் மூலம் ஊக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வியாபார அபிவிருத்தி வலையமைப்பின் ஒரு செயற்பாடாக குடாநாட்டில் மேற்கொள்ளக் கூடிய கைத்தொழில்கள் தொடர்பான ஆய்வொன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி இங்கு ஆரம்பிக்கக் கூடிய 25 கைத்தொழில்கள் தொடர்பான அறிமுக நிகழ்வாக இது அமைந்தது.

வர்த்தக சேவை உதவி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மார்க் ஸ்ரீவ்வைப், இலங்கை வர்த்தக அபிவிருத்தி நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹித பெரேரா ஆகியோர் இந்த அறிமுக நிகழ்வில் கலந்கொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள்.

வலய ரீதியாக மேற்கொள்ளக்கூடிய சாத்தியமான கைத்தொழில்களைத் திட்டமிடுதல், சாத்தியக்கூறுகளை வரிசைப்படுத்தி அதனைப் பற்றி மேலும் ஆராய்வது, கைத்தொழில் முயற்சியை ஆரம்பிப்பது, அதனை அபிவிருத்தி செயவது தொடர்பான விரிவான விளக்கவுரைகள் இந்த அறிமுக நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வங்கி முகாமையாளர்கள் மற்றும் வர்த்தகர் சங்கம், சிறுகைத்தொழில்களுடன் தொடர்புடைய திணைக்களங்கள் சிறு கைத்தொழில் நிறுவனங்கள் ஆகியவறறின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (3-8)



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.கிளையில் காப்புறுதி பெற்றிருந்த கெல்வின் தயான் என்பவருக்குரிய மரண இழப்பீட்டுத் தொகைக்கான (ரூபா 2லட்சம்) காசோலையை அவரின் மனைவியான மலர்விழியிடம் கையளிக்கப்பட்டது.

நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.ரங்கநாதன் காசோலையை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவனத்தின் பணிப்பாளர் துசார ரணசிங்க மற்றும் விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் வசந்த விஜயசிங்க ஆகியோர் காணப் படுகின்றனர். (3)




மக்கள் வங்கியின் பருத்தித்துறைக்கிளையில் புதுவருட தினத்தன்று பெருந்தொகையான சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர் ஒருவருக்கு உதவிப் பிரதேச முகாமையாளர் த.க.ஆனந்தராஜா ஒரு தொகை மணிக்கூடுகளை அன்பளிப்பாக வழங்குகின்றார். (3)



சென்ஜோன்ஸ் கல்லூரியில் இலங்கைவங்கியின் சேமிப்புப் பிரிவை, இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் நாடாவெட்டி உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கின்றார். கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன், மேற்தரக்கிளை பிரதான முகாமையாளர் எஸ்.விக்னராசா, வங்கியின் இணைப்பதிகாரி வி.ஆர் சுதாகரன் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (3)

# மோட்டார் திணைக்களப்பணிகளுக்கு மென்பொருள் அறிமுகம்



உலகம் எப்போதோ பூகோளமயப்பட்டபோதும் வடக்கு - கிழக்கு அண்மைய வருடங்களில்தான் இத்துறையில் முளையெடுத்தது. எனவே, பல அரச திணைக்களங்கள் கூட தம்மைக் கணனி மயப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன. இவ்வகையில், வடக்கு - கிழக்கைப்பொறுத்தவரை இத்துறையில் எஸ்.ரி.பி.கணனி நிறுவனத்தின் பங்கு முக்கியமானது.

ஏற்கனவே, பாவனையிலுள்ள ஓய்வூதிய மென்பொருள் (Pension Programme), வலுவிழந்தோர் ஓய்வூதியம் (PAMA) எனும் மென்பொருள்களை வெளியீடு செய்த எஸ்.ரி.பி கணனி நிறுவனம் இவ்வருடம் மாகாண மட்டத்தில் ஒரு மென்பொருளைத் தயாரித்துள்ளது. NEMORIS எனப்படும் வடக்கு - கிழக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்காக உருவாக்கப்பட்ட இம் மென்பொருள் ஒவ்வொரு மாவட்டமாக, அண்மையில் வெளியீடு செய்யப்பட்டது.

இவ்வளவு காலமும் மோட்டார் போக்குவரத்து அனுமதிகளைப் பெறுவதில் இருந்து வந்த காலதாமதத்தை நீக்கும் பொருட்டு இம்மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. விண்டோஸ் ஒபரேற்றிங் சிஸ்ரத்தில் இயங்கக் கூடியதாகவும், எவரும் எளிதில் கையாளக்கூடியதுமான முறையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

மென்பொருள் துறையில் பத்து வருட அனுபவத்தினூடு வடிவமைக்கப்பட்ட இம்மென்பொருள் யாழ்.மண்ணிலிருந்து வெளிவருவது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. வடக்கு - கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் இவ் வெளியீட்டு நிகழ்வு நடத்தப்பட்டது. இதில் வடக்கு - கிழக்கு மோட்டார் போக்குவரத்துத்துறைப் பணிப்பாளர் அ.செல்லத்துரை தலைமைதாங்கி வெளியிட, அவ்வவ் மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் (நிதி) ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் 400 பிரதேச செயலகங்களில் பாவிக்கப்படவுள்ள இம்மென்பொருள் விண்டோஸ்98, விண்டோஸ் XP ஆகிய தளங்களிலும் இயங்கக்கூடியதாகவிருப்பது இதன் சிறப்பம்சம் ஆகும். (3)

# பாசையூர் புனித அந்தோனியார் யாத்திரைத்தல திருவிழா



## பங்குத்தந்தையின் இதயத்தில் இருந்து

பாசையூர் புனித அந்தோனியார் பெருவிழாவில் பாசையூர் வாழ் பக்தர்களையும், இலங்கையில் வடபகுதியில் இருந்து புனித அந்தோனியாரின் பக்தர்களாக இங்கு கூடி வருவோருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பாசையூரின் புனித அந்தோனியார் பதிக்கு வருகின்ற பக்தர்கள் அந்தோனியாரின் பாதுகாப்பையும், உதவியையும் பெற்று அருள் வளங்களால் நிறைந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவ் அனுபவம் அவர்களது வாழ்வில் இறைவனை சந்திக்கின்ற ஒரு அனுபவமாக இருந்திருக்கின்றது. புனித அந்தோனியாருடைய திருவிழாவைக் கொணடாடுகின்ற இன்றைய தினத்தில் பாசையூர் புனித அந்தோனியார் பதிக்கு வந்து புதுப்பித்து ஆழமாக்கி புதுவாழ்வு வாழ வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்.

**இராஜேந்திரம் ஸ்ரலின் அடிகளார்**
**பங்குத்தந்தை பாசையூர்.**

பாலனைத் திருக்கரத்தில்
ஏந்திநிற்கும்
புனித அந்தோனி நின்
பதம் நிற்கும் பாவிகள்
எமக்காய்
வேண்டிக்கொள்ளும்

## பதுவைப் பதியர் புனித அந்தோனியார் அற்புத வரத்தர்

திருச்சபையின் புனிதர்களில் அதிகம் பிரபலமடைந்தவரும், நன்கு கௌரவிக்கப்பட்டவரும், உலகெங்கணும் போற்றிப் பாராட்டப்பட்டவரும், வரங்கேட்டு வருபவர்களுக்கு வரங்கள் பல அளிப்பவருமான பதுவைப் புனிதர் அந்தோனியாரை போன்ற அருளாளர் வெகுசிலரே எனின் அது மிகையாகாது. "புனித அந்தோனியார் பதுவையின் பாதுகாவலர் மாத்திரம் அன்றி உண்மையாகவே அகில உலகத்தின் புனிதராகவுமிருக்கின்றார்" என்ற 13ஆம் சிங்கராயர் பாப்பரசரின் கூற்றில்தான் எவ்வளவு உண்மை.

போர்த்துக்கல்லில் உள்ள லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் நாள் பிறந்தார். புனிதரின் தந்தையார் பெயர் மாட்டீன் புஸ்யோன் தாய் தெரசாத திவேரா என்ற அழகிய தேவாம்சம் பொருந்திய அம்மணி. பிரபுக்கள் வம்சத்தில் பிறந்த புனிதர் திருமுழுக்கின் போது பெற்ற திருப்பெயர் பெர்டினன்ட். சிறு வயதிலேயே தேவசினேகத்தினால் உந்தப்பட்ட நம் புனிதர் சிறு துறவிகள் (Friars Minor) சபையில் சேர்ந்து தேவ தொண்டாற்ற முடிவு செய்தமையில் வியப்பேதுமில்லை. அவ்வமயம் தன் பெயரை அந்தோனி என மாற்றிக் கொண்டார். தமது பதினைந்தாம் வயதில் அகுஸ்தீன் துறவற சபையில் சேர்ந்து சகல கல்வி கேள்விகளிலும், வேதாகம அறிவிலும் விற்பன்னராக விளங்கினார்.

இக்காலத்தில் மொரக்கோ தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கிளம்பிய கலவரத்தில் பிரான்சிஸ்கு சபை துறவிகள் பலர் வேத சாட்சிகளாக உயிர்த்தியாகம் பண்ண நேரிட்டது. இந் நிகழ்ச்சியில் நம் புனிதர் உள்ளத்தில் தானும் இறைவனுக்காக மரிக்க வேண்டுமென்ற ஆசையாக உருவெடுத்தது. தானும் மொரக்கோ செல்லத் தீர்மானித்தார். இறைவன் சித்தமோ வேறுவிதமாக இருந்தது. உடல் நோயுற்ற நிலையில் இவர் ஸ்பானியா திரும்ப நேர்ந்தது. அவ்வேளை வீசிய கடும் புயற்காற்று நம் இளம் புனிதரை தென் இத்தாலியில் சிசிலி நகரில் நடந்து கொண்டிருந்த பிரான்சிஸ்கு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது.


கடின தவத்தாலும், செபத்தாலும், கடின உபவாசத்தாலும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும் ஆண்டவரின் அன்புக்கு பாத்திர மானார். நம்புனிதர் எவ்வளவுதான் அறிவுத்திறனை அவர் மறைத்திருந்தாலும், அவரது மேன்மையை வெளிப்படுத்த ஆண்டவர் சித்தம் கொண்டதன் காரணமாக அழகிய பிரசங்கம் ஒன்றை அவர் நிகழ்த்த நேர்ந்தது. அவரது அறிவும் ஆழ்ந்த இறைபக்தியும் இவ்வாறு வெளியானதும் புனித பிரான்சிஸ்கு அவர்களே நம் புனிதரை முக்கிய போதகராக தம் சபையில் நியமித்தார். பிரான்சு தேசத்தில் ஆர்ன்ஸ். மொத்த மொலிபா பூர்ஜெசிலும், இத்தாலியில் வேர்செல்லி இறிமினி, பதுவை ஆகிய பட்டணங்களிலும், புனித அந்தோனியார் ஆற்றிய பணி சிறப்பு வாய்ந்தது. செல்லு மிடமெல்லாம் மக்கள் அவர் பேச்சைக் கேட்கத் திரண்டனர். பாவிகள் திருந்தினர். தென் பிரான்சில் இக்காலத்தில் அல்பிஜென்சர் என்பவர் கிறிஸ்தவ திருமறையின் போதனைகளை தவறான வழியில் விளக்கியும் விமர்சித்தும் வந்தார். அவ்வாறான போதகத்தில் மயங்கிய எத்தனையோ பேர்களை இறைவனின் மந்தைக்கு மீட்டுத்தந்த பெருமை நம் புனிதருக்குண்டு. இதனாலேயே அவரை பதிதரின் சுத்தியல் எனவும் அழைத்தனர்.

தம்முடைய அடியானுடைய சேவையையும், போதகத்தையும், பற்பல அரிய பெரிய அற்புதங்களைச் செய்வித்து முத்திரையிட்டார் ஆண்டவர். பன்மொழி பேசும் வரமும், ஒரே வேளையில் இரு இடங்களில் காணப்படும் வரமும் பெற்றவர் புனித அந்தோனியார். நோய்களை குணமாக்கினார், பேய்களை விரட்டினார், மாண்டவர் மீண்டார், தெல்லைந்தவை கிடைத்தன. இப்படி பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்திருப்பினும் நற்கருணையில் ஆண்டவர் உண்மையாகவே பிரசன்னமாகி இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டிய போது, கழுதைகள் கூட வந்து மண்டியிட்டமையும் மனிதருக்கு புனிதர் தேவ வார்த்தையைப் போதித்த போது மீன்களும் கூட தண்ணீருக்கு வெளியே வந்து போதனையைக் கேட்டமையும் சுவையான நிகழ்ச்சிகள்.

ஒரு சமயம் இவரை முற்றாக வெறுத்த சில தீயவர்கள் நச்சு உணவை இவர் உண்ணச் செய்தனர். எனினும் சிலுவை அடையாளம் இட்டு உண்டதினால் இவருக்கு தீங்கேதும் ஏற்படவில்லை. பொய்க்குற்றம் சாட்டப்பட்டு மரணதண்டனை ஏற்கவிருந்த தம், தந்தையைக் காப்பாற்ற இறந்தவனையே மீண்டும் உயிர் பெற்று நீதிமன்றத்தில் தோன்றச் செய்தார். இப்படிச் செய்த புதுமைகள் எண்ணிலடங்காதபடியினாலேயே இவரை "கோடி அற்புதர்" என பக்தர்கள் போற்றுவர்.

அற்புதம் செய்ததினால் அவர் புனிதராகவில்லை. தன் தாழ்மை, நேர்மை, அன்பு முதலியவற்றால் இறைவனின் நேச தோழர் ஆனமையினாலேயே புனிதரானார். இத்தகைய சிறப்பும், மேன்மையும் கொண்ட புனிதரை ஆண்டவர் தமதண்டை விரைவிலேயே அழைத்துக் கொண்டார்.

தமது 36ஆம் வயதிலேயே ஆர்செல்லா என்னும் நகரில் தேவ தாயாரின் மகிமைப் பாடலை இசைத்துக் கொண்டே பரம பதம் அடைந்தார். அவர் இறந்த தினமாகிய ஆனி 13ஆம் நாள் (1231) ஆண்டாண்டு காலமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இறந்த நான்காம் நாள் அவர் அடக்கம் செய்யப்பட்ட தினம் செவ்வாய்க்கிழமையான படியால் வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்கிழமையிலும் புனிதரின் மகிமை நினைவு கூரப்படுகின்றது.



பாசையூர்
புனித அந்தோனியாரின்
யாத்திரைஸ்தலப்
பெருவிழா நாளை
13-06-2005
திங்கட்கிழமை காலை 7
மணிக்கு யாழ். ஆயர்
மேதகு தோமஸ்
சவுந்தரநாயகம்
ஆண்டகை தலைமையில்
இடம்பெறும்.
அந்தோனியார்
பக்தர்கள் அனைவரும்
திரண்டுவந்து கோடி
அற்புதரின் அருள்
வளங்களைப் பெற்றுச்
செல்லுமாறு அன்புடன்
அழைக்கிறோம்.

*-பங்குத்தந்தை-*

## பாசையூர் மக்கள் உறுதியான விசுவாசத்துடன் ஆண்டுதோறும் விழா எடுப்பது பாராட்டுக்குரியதாகும்

கடலலைகள் ஆர்த்தெழுந்து அரவணைக்கும் பாசையூர் பதியில் குடிகொண்டு, பக்தர்களுக்குக் கோடி அற்புதங்கள் புரிந்து, அருள் மழை பொழிந்து, அவர்களை ஆதரித்துக் காப்பாற்றிவரும் புனித பதுவை அந்தோனியார் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழும் பாசையூர் வாழ் மக்களுக்கும் அவர் அடைக்கலம் நாடித் தேடிஓடிவரும் அடியார்களுக்கும் ஆனி 13 பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்நாளாகும்.

புனித பதுவை அந்தோனியார் போர்த்துக்கல் நாட்டு லிஸ்பன் நகரில் 1195 ஆகஸ்ட் 15 அன்று பிறந்தார். மொறொக்கோ நாட்டில் வேதசாட்சிகளாக மரித்த பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் ஐவரின் உடல்கள் ஆரவாரத்துடன் போர்த்துக்கல் நாட்டுக்குக் கொண்டுவரப் பட்டமையைக் கண்ட அந்தோனியார் கடவுளுக்காகத் தாமும் உயிர்விட ஆசித்து, சிரமப்பட்டு அனுமதி பெற்று, பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து, வேதம் போதிக்க ஆபிரிக்கா செல்லத் தம்மை அர்ப்பணித்தார். குருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி ஊட்டினார். கடவுளைப்பற்றி மக்களுக்குப் போதிக்கவேண்டும் எனும் தணியாத தாகத்தினால் ஆசிரியர் பதவியை விட்டு விலகி பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி என்னும் நாடுகளில் ஊர் ஊராகச் சென்று மக்களுக்குக் கடவுளைப் பற்றிப் போதித்து, அநேக மக்களை இறையரசில் சேர்த்தார். அதிசய அழகு வாய்ந்த பாலகன் இயேசு மேசைமீது திறக்கப்பட்டுக்கிடந்த புத்தகத்தில் நின்று கொண்டு, தன் இரு கரங்களாலும் கழுத்தைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு விளையாடிக் கொண்டிருக்கும் பாக்கியத்தைப் பெற்றார். தாழ்ச்சியின் பிறப்பிடமாக விளங்கிய புனித அந்தோனியார், தலை தாழ்த்தி, எல்லோருக்கும் கீழ்ப்படிந்து சிறந்த துறவியாக வாழ்ந்தார்.

வனவாசம் மேற்கொண்டு, ஏகாந்தத்தில் ஈடுபட்டார். மாசறியாதவராய் தியான நெறியில் இரவு பகல் செலவழித்தார். தன்னை ஒறுத்து, உபவாசங்கள் காத்து, சுகபோகங்களை வெறுத்து, இறை உறவில் என்றும் நிலைத்து வாழ்ந்தார்.

குருடருக்குப் பார்வையும் செவிடருக்குக் கேள்வியும், ஊனமுற்றோர்களுக் குணமும், இறந்தோர்க்கு உயிரும் அளிக்கும் வரமடைந்தவராய் நன்மை பல செய்து, மக்களை இறைவழியில் நடத்திச் சென்றார். பிறப்பிலிருந்து இறப்பு வரை இறைவனை அனுபவித்து வாழ்ந்த இப் புனிதரைப், பாதுகாவலராகக் கொண்ட பாசையூர்மக்கள் உறுதியான விசு வாசத்துடனும் பக்தியுடனும் ஆண்டு தோறும் விழா எடுப்பது பாராட்டுக்குரியதாகும். புனிதரின் அன்பும், அறிவும், அருளும், கருணையும் என்றென்றும் இம் மக்கள் மேல்நிலை கொண்டு அவர்கள் வாழ்வை வளமாக்கி அமைதியும், சமாதானமும் நிறைந்த வாழ்வைக் கண்டடையவும், பொருளாதார சுபீட்சத்துடன் வாழவும் புனிதரின் அருள் என்றென்றும் இவர்களுடன் இருக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி பாஸ்கல் செபஸ்தியாம்பிள்ளை**

## கோடி புதுமையாளர் புனித அந்தோனியார்

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

உலகிலே இன, மத, நிறங்களை கடந்து பக்தர்களை தன்பால் ஈர்க்கும் பெரும் புகழ்பெற்ற ஒரு புனிதர் இருக்கிறார் என்றால் அவர் புனித அந்தோனியாராகத்தான் இருப்பார். அநேக ஆலயங்களும், யாத்திரை ஸ்தலங்களும் ஒரு புனிதரின் பெயரால் கட்டி எழுப்பப்பட்டு அங்கு மக்கள் வந்து அதிகமாக குவிகின்ற இடமாக புனித அந்தோனியாரின் ஆலயங்களும், யாத்திரைத் தலங்களுமே இருக்க முடியும். வாழும் போதும், இறந்த பின்னரும் புதுமைகளை செய்து கோடி அற்புதர் எனப் புகழ்பெற்று இன்னும் புதுமைகளால் புகழ்பெற்று விளங்குகின்ற ஒரு புனிதர் இருக்கிறார் ன்றால் அது புனித அந்தோனியாராகத்தான் இருக்க முடியும். ஏராளம் பக்தர்களை தமக்குச் சொந்தமாக்கி அவர்களின் ஆன்மீக, உடல்நல தேவைகளை நிறைவுசெய்து தொடர்ந்தும் புகழ்பெற்று அருள் மழை பொழிந்துவரும் ஒரு புனிதர் இருக்கிறார் என்றால் அது புனித அந்தோனியாராகத்தான் இருக்க முடியும். இலங்கையிலும் மற்றைய இடங்களிலும் புனித அந்தோனியாருக்கு கட்டியெழுப்பப்பட்டுள்ள ஆலயங்களும் யாத்திரை ஸ்தலங்களும் இங்கு வந்து குவிகின்ற கோடான கோடி யாத்திரிகர்களுடைய தொகையும் மேலே சொல்லப்பட்ட அனைத்திற்கும் சாட்சியாக அமைகிறது.

இலங்கையில் உள்ள அந்தோ னியார் பதிகளிலே இரண்டாவது இடத்தை பெறுகின்ற பதியாக பாசையூர் புனித அந்தோனியார் பதி விளங்குகிறது. கொழும்பிலே அமைந்துள்ள கொச்சிக்கடை புனித அந்தோனியாரின் தேசிய யாத்திரை ஸ்தலத்திற்கு அடுத்தாக விளங்கும் பாசையூர் அந்தோனியார் பதியில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகள் தோறும் கூட்டம் கூட்டமாக வந்து குவி கின்ற பக்தர்கள் இவ் விழாவில் ஒன்றா கக்கூடி புனிதருக்கு விழா எடுக்கவும், தமது உறவுகளை புதுப்பிக்கவும் போகிறார்கள். பொதுக் கட்டமைப்பு, புத்தர் சிலை விவகாரம் போன்ற விவகாரங்களால் குழப்பம் ஏற்பட் டுள்ள நிலையில் கோடி அற்புதர் துணைபுரிய வரம் வேண்டுவோம்.

## புலிகளை சர்வதேசம் புரிந்துகொள்ளும் வேளையில்



# போரை வலிந்து திணிக்க அரசும் இராணுவமும் சதி

### முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,ஜூன்13

விடுதலைப் புலிகளை சர்வதேசம் சரியாகப் புரிந்துகொண்டுவரும் வேளையில் - புலிகள் மீதான சர்வதேச ஆதரவும் நன்மதிப்பும் பெருகிவரும் வேளையில் - அதனை சீர்குலைக்கும் வகையில் எம்மீது போரைத் திணிப்பதற்கு அரசும் இராணுவமும் சதி செய்கின்றன.

- இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன்.

சமகால அரசியல் சூழ்நிலைகளை விளக்குவதற்கான சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று அண்மையில் முல்லைத்தீவு தண்டுவன் பகுதியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரசியல் துறைப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானம் என்ற போர்வையில் எமது போராளிகளையும் பொதுமக்களையும் கொன்றொழிக்கும் கைங்கரியத்தை ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள்மூலம் எமக்கு ஆத்திரமூட்டி யுத்தத்திற்கு வலிந்து இழுக்க அரசு முனைகின்றது. அவ்வாறு முனைவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

தற்போது சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும் நன்மதிப்பும் அதிகரித்து வருகின்றன. இவற்றைத் தகர்த்தெறியும் நோக்குடனேயே எம்மை யுத்தச் சூழலுக்குள் இழுக்க நினைக்கின்றது.

அதுமட்டுமல்ல, சிங்கள அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், சுனாமி அனர்த்தம் போது எமது கடற்படைக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது என்ற தப்புக் கணக்கு போன்றவையும் யுத்தத்தை எம்மீது திணிப்பதற்குரிய காரணங்களாக அமையலாம்.

சமாதானச் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு மூன்றாண்டுகள் கடந்தபோதும் எமது மக்களுக்கான இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால், இந்த மூன்றாண்டு கால இடைவெளிகளில் எமது தேச விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையைச் சர்வதேசம் அறிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை ஏறபட்டுள்ளது. இதுவே நாம் பெற்ற வெற்றியாகும்.

எமமக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள போரை எதிர்கொள்ள வேண்டியவர்களாக நாம் மாறியுள்ளோம். இந்தப் போராட்டத்தில் வெற்றிவாகை சூடப்போவது நாம்தான். எதிரிப்படை அல்ல. ஏனெனில், எமது போராட்டம் நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தப்படுகிறது.

எமது இந்த நியாயமான போராட்டத்தை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (த-410-353)




## உளவளச் சேவையாளர்கள் விவரம் பதிவுசெய்யப்படுகிறது

கிளிநொச்சி,ஜூன்13

உளவளத்துணைச் சேவையைச் செய்யும் ஒவ்வொரு நிறுவனமும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் உளவள சேவையாளர்களின் விவரங்களைப் பதிவுசெய்து 20ஆம் திகதி தமது அடையாள அட்டைகளுடன் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உளவளத்துணை செயற்பாட்டு ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல் ஒன்று கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வன்னியில் செயற்படும் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், உளவளச் சேவையாளர்கள், வைத்தியர்கள், தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் உளவளச் சேவை மேம்பாடு பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன், வடக்கு - கிழக்கு பகுதிக்கான உளவளச் சேவை மேம்பாட்டு மையம் ஒன்றை அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இந்த உளவள மைய சேவை நிலையம் மூலம் உளவளப் பயிற்சி, வதிவிட வசதி, உளவள ஆட்படுத்தல், சிகிச்சை வசதிகள் மேற்கொள்ளல், உளவள மத்திய சிகிச்சை மருத்துவ நிலையம் அமைத்து அதில் நிபுணத்துவம், மனநோயியல் நிபுணரின் சேவை மையத்தை ஒருங்கிணைத்தல் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

அத்துடன், அந்த நிலையம் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதிலும் உளப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான சேவையை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலை ஒவ்வொரு மாதமும் வரும் இரண்டாவது வியாழக்கிழமைகளில் நடத்துவதென்றும் அதன்மூலம் இதன் செயற்பாட்டை ஆய்வுசெய்து அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (த-203)

## சுற்றாடல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு

வேரவில்,ஜூன்13

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினர் வன்னியில் சுற்றாடல் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பாடசாலைகள் ரீதியாக கருத்தரங்குகள், சுற்றாடல் சம்பந்தமான ஆக்கப்போட்டிகள், மர நடுகைத் திட்டங்கள் என்பன நடத்தப்பட்டன.

இந்தவகையில் பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினரினால் தமது ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பாடசாலைகள் ரீதியாக கருத்துரைகள், மரம் நடுகை, சிறந்த மாணவர்களுக்கான பரிசில் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தினர். (த-404)

## கலைஞர்கள் சங்கம் அமைப்பு

புதுக்குடியிருப்பு,ஜூன்13

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கலைஞர்களை ஒருங்கிணைத்து கலைஞர்களுக்கான சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு தேசிய எழுச்சிப்பேரவை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

முல்லை. மாவட்டத்தில் கலைகள் அருகி வருவதனால் அதனைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் தலைவராக செ.ரவீந்திரனும் செயலாளராக எம்.எஸ்.செல்வராசாவும் பொருளாளராக க.செல்வராசாவும் உபதலைவராக சி.நவரத்தினமும் உபசெயலாளராக க.செல்வநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுடன் 10 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யபபட்டனர். இச்சங்கத்தின் ஆலோசகர்களாக செல்லக்குட்டி, சுந்தரம், சரவணபவான் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், முல்லை. மாவட்டத் தமிழ்ச்சங்கத் தலைவர் சரவணபவான், தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த சங்கர் உட்பட எழுத்தாளர்கள், நெறியாளர்கள், அண்ணாவிமார்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள கலைஞர் சங்கத்தினர் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு கரும்புலிகள் தியாகத்தை மையமாக வைத்து சமூக நாடகம் ஒன்றை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-410-353)

## கடற்றொழில் சமாசத்தின் வங்கி மீண்டும் இயங்குகிறது

முல்லைத்தீவு,ஜூன்13

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வங்கிச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வங்கி மூலம் 'ஓயாத அலைகள் I' நடவடிக்கையின் பின்னர் முல்லைத்தீவு நகரம் கட்டி எழுப்பப்பட்டது. அது கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மீண்டும் முற்றாக அழிந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி வங்கியின் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தலைவர் அ.மரியதாஸ் தெரிவித்தார்.

கடற்றொழிலை மேம்படுத்தவும் மீள ஆரம்பிக்கவும் சுழற்சிமுறைக்கடன் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த-353)

## பெண்கள், சிறுவர்களுக்கென 'அன்பு மனை' திறந்துவைப்பு

சமூகத்தில் பாதிப்புக்குள்ளாகி ஆதரவு தேடி வருகின்ற பெண்கள், சிறுவர்களை அரவணைத்து அவர்களை மீண்டும் சமூகத்துடன் இணைத்து விடுவதற்கான புதிய வேலைத் திட்டமொன்றை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இவர்களை அரவணைப்பதற்காக 'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 'அன்பு மனை' என்ற பெயரில் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த 'அன்பு மனை' கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி சுதர்சினி செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அன்பு மனையின் பெயர்ப்பலகையை 'யுனிசெவ்' பிரதிநிதி பெனிபுறு அம்மையார் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து புதிதாக இணைந்த பயனாளிகளைப் பார்வையிட்டு அவர்களின் எதிர்காலம் தொடர்பாக அவர் கலந்துரையாடினார்.(த-203)

## 'சீற்' நிறுவனத்துக்கு நன்றி தெரிவிப்பு

அளம்பில்,ஜூன்13

முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் 'சுனாமி'யால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஆற்றுப்படுத்தலுக்கான கல்விச் சுற்றுலாவை மேற்கொள்வதற்குப் உதவி வழங்கிய 'சீற்' நிறுவனத்தினரைக் கௌரவிப்பதற்காக கடந்த வியாழக்கிழமை நன்றி நவில்தலும் பாராட்டுவிழாவும் நடைபெற்றது.

மேற்படி பாடசாலையின் அதிபர் எம்.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நிறுவனத்தின் முல்லைத்தீவு திட்டப்பணிப்பாளர் என்.நிதர்சன் மற்றும் கள உத்தியோகத்தர்களான பி.ஞானசீலன், சு. தேவதாஸ் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். விழா நிறைவில் பாடசாலை சமூகத்தினரால் 'சீற்' நிறுவனத்துக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. (த-416)

## முன்பள்ளி விளையாட்டு விழா

ஒட்டுசுட்டான்,ஜூன்13

கற்சிலைமடு பரந்தாமன் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா கடந்த7ஆம் திகதி அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சுதாகரன் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு பண்டாரவன்னியன் சிலை மைதானத்தில் நடைபெற்றது. (த-341)

## முல்லை. கல்விக்கழக பொறுப்பாளராக சுடர்

முல்லைத்தீவு,ஜூன்13

முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளராக சுடர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லை. மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளராக செயற்பட்டுவந்த அறிவன்பன் மாஸ்டர் கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளராக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதனை அடுத்தே அவரது இடத்திற்கு சுடர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-410-353)

## வாத்தியக் கருவிகள் கையளிப்பு

அளம்பில்,ஜூன்13

"சேவா லங்கா" நிறுவனத்தால் முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்திற்கு வாத்தியக்கருவிகள் கையளிக்கப்பட்டன.

ஓகன், தபெலா, வீணை, மிருதங்கம் உட்பட 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய வாத்தியக்கருவிகளே வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (த-416)



முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும் சமீபத்தில் நடைபெற்றது. அதில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளில் ஒரு காட்சியினைப் படத்தில் காணலாம். *(படம்: அளம்பில் செய்தியாளர்)*

## கல்வி மேம்பாட்டுப் பேரவை புதுக்குடியிருப்பில் அமைப்பு

முல்லைத்தீவு,ஜூன்13

புதுக்குடியிருப்புப் பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தி கருதி தமிழீழக் க்ல்விக் கழகத்தின் முல்லை மாவட்டப் பிரிவினரால் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கான கல்வி மேம்பாட்டுப் பேரவை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட குடும்பப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் புதுக்குடியிருப்புப் பிரதேச குடும்பப் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவராக கொக்கிளாய் அ.த.க. பாடசாலை அதிபர் மு.பரஞ்சோதியும், உப தலைவராக எஸ். சிவராசாவும், செயலாளராக முள்ளி வாய்க்கல் கனிஷ்ட வித்தியாலய அதிபர் எஸ்.மாசிலாமணியும், உப செயலாளராக கணேசா வித்தியாலய அதிபர் திருமதி பொன்.சிவராசாவும் பொருளாளராக புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலய அதிபர் ம.அன்ரன் குலதாஸூம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் நான்கு பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

முல்லை. மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், தாயவன், அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா, முல்லை. மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் மற்றும் சுடர் ஆகியோர் உட்படப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-410)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் : 30.01.1931

விண்ணில் : 25.05.2004

## திருமதி ஆறுமுகம் கனகம்மா

(இளைப்பாறிய ஆசிரியை, யா/ சாவகச்சேரி கமலாம்பிகை வித்தியாலயம் மீசாலை)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் : 17.09.1921

விண்ணில் : 22.11.2000

## அருணாசலம் ஆறுமுகம்

சமாதான நீதிவான்

(முன்னாள் உப அதிபர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

அன்பின் திருவுருவங்களே !
ஆசையுடன் எமைப்பேணி வளர்த்து
இன்பமுற நல் வாழ்வு தந்து வாழ்வளித்த
தெய்வங்களே உங்களை எங்கு காண்போம் ?
ஊருக்கோர் உத்தமராகி
எல்லோருக்கும் நன்மை செய்து
ஆண்டுகள் ஒன்றல்ல ஐந்து தான் சென்றாலும்
பெற்றோராகிய உங்களை நாங்கள் மறப்போமா?

'ஜெயபதி'
தாமோதரம் பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

-குடும்பத்தினர்.

(36464)(51-11-17)

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகள்

## தமிழர் தாயகம் எங்கும் நடத்த ஏற்பாடு

கிளிநொச்சி,ஜுன்13

கரும்புலிகள் நாளை முன்னிட்டு எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஆண், பெண் இரு பாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியும், 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றன.

மரதன் ஓட்டப் போட்டி சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக 42.9 கி.மீ. தூரம் கொண்டதாக நடைபெறும்.

போட்டியில் வெற்றிபெறும் வீரர்களுக்கு 20 ஆயிரம், 15 ஆயிரம், 10 ஆயிரம் பணப்பரிசுடன், பரிசில்கள், நினைவுக் கிண்ணங்கள் என்பன வழங்கப்படும்.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றிபெறும் வீரர்களுக்கு பணப்பரிசுகள், பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களிடம் விண்ணப்பம்பெற்றுப் பூர்த்திசெய்து இரண்டு புகைப்படங்களுடன் எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பிந்தாமல் தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

புகைப்படங்கள் இணைக்கப்படாத படிவங்களும் பிந்திக் கிடைக்கும் படிவங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (3)

### மாதகலில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்13

மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வலிகாமம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை லீக்குகள் உள்ளடக்கிய கழகங்களுக்கிடையில் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையால் காலஞ்சென்ற முன்னாள தலைவர் ம.அன்ரனதாஸ் (செட்டி), அவரது பிள்ளைகள், திருமதி யூ.ரவீந்திரன், அவரது புதல்வர் உட்பட அதன்பொருட்டு மரணித்த மக்களின் ஞாபகார்த்தமாக இப்போட்டி நடத்தப்படுகின்றது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற கழகங்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன் விணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(3-ரி)

## விளையாட்டு

### ரெனிஸ் விளையாட்டில்

# இந்தியாவில் பயிற்சிபெற இரு யாழ். வீரர் தெரிவு



ரொ.துஷ்யந்தன்



என்.சைலன்

யாழ்ப்பாணம்,ஜுன்13

ரெனிஸ் விளையாட்டில் மேலதிக பயிற்சி பெற இந்தியா செல்லும் இலங்கை அணியில் யாழ். வீரர் இருவருக்கும் இடம் கிடைத்துள்ளது.

இளம் ரெனிஸ் வீரர்களை உருவாக்கும் திட்டம் இலங்கை ரெனிஸ்.சம்மேளனத்தால் யாழ்ப்பாணத்தில் அறிமுகஞ்செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் உள்ள 7 பாடசாலைகளுக்கிடையில் மினி ரெனிஸ போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப்போட்டியில் வெற்றியீட்டிய புனித பத்திரிசியார் கல்லூரியும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும் கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

இளம்ரெனிஸ் வீரர்களான என்.சைலன், ரொபின்சன் துஷ்யந்தன் ஆகியோர் மேலதிக பயிற்சிக்காக இந்தியா செல்கிறார்கள்.

வெளியிட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தியாவில் பயிற்சிபெறச்செல்லும் அணியில் இவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

கொழும்பு புறப்பட்டுள்ள இவர்கள் ஓரிரு தினங்களில் இந்தியாவுக்குச் செல்வர்.(3-190)

# தேசிய உயரம் பாய்தலில் யாழ். வீரர் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம்,ஜுன்13

தேசிய மெய்வன்மை அணித்தெரிவுப் போட்டியில் உயரம் பாய்தலில் யாழ். வீரர் எஸ்.கமலமோகன் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

தேசிய மெய்வன்மை அணித் தெரிவுக்கான போட்டி கொழும்பில் நடைபெற்றது. இதில் உயரம் பாய்தல் போட்டியில் 45 வீரர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். வீரர் எஸ்.கமலநேசன் 2 மீற்றர் தூரம் பாய்ந்து மூன்றாவது இடத்தைப் பெற்றார். (3-190)

### ஹொக்கிச் சுற்றுப் போட்டி:

# யாழ். பல்கலைக்கழக அணி இணைச் சம்பியனாகத் தெரிவு

## வரலாற்றில் கிட்டிய முதல் வெற்றி எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்13

அழைக்கப்பட்ட பல்கலைக்கழக அணிகளுக்கிடையில் கடந்தவாரம் ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் நடந்த ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழகமும் பேராதனைப் பல்கலைக்கழகமும் இணைச்சம்பியன்களாகத் தெரிவாகின.

யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் பேராதனைப் பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடந்த முதலாவது ஆட்டத்தில் யாழ். அணி 2-0 என்ற கோல் கணக்கில் தோல்விகண்டது. மொறட்டுவப் பல்கலைக்கழகத்துடன் யாழ். பல்கலைக்கழகம் மோதிய ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

அடுத்து ரஜரட்டை பல்கலைக்கழக அணிக்கும் யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது. சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டதில் யாழ். பல்கலைக்கழக அணி 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. யாழ். வீரர் சிவதீஸ் அந்தக் கோலைப் போட்டார்.

தொடர்ந்து நடந்த இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் பேராதனைப் பல்கலைக்கழக அணியும் மோதின. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. மேலதிக நேரம் வழங்கப்பட்ட போதும் இரு அணிகளும் கோல் எதையும் போடவில்லை. இதையடுத்து இரு அணிகளும் இணைச் சம்பியன்களாகத் தெரிவாகின.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழகம் சம்பியனானது இதுவே முதல் தடவை ஆகும் எனப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகு இணைப்பாளர் தெரிவித்தார். (03)

# தமிழர்களின் நலனுக்கான வாய்ப்புகள் புறந்தள்ளப்படின் விளைவுகள் விபரீதம்

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்13

தமிழர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படுமானால் - அதறகான வாய்ப்புகள் புறந்தள்ளப்படுமானால் - சிங்களப் பேரினவாதிகள் அதன் விளைவை விரைவில் சந்தித்தே ஆக வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்.

இதுவிடயமாக மேற்படி கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிங்கள ஆட்சியாளர்களும் சிங்களப் பேரினவாதிகளும் தமிழ் மக்களின் உரிமைகளில் எதனையுமே அவர்களுக்கு வழங்கப்போவதில்லை என்பதனை இன்று தென்னிலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் படம்போட்டுக் காட்டுகின்றன.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களினால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றமையானது இன்று ஓர் உச்ச நிலையை அடைந்துள்ளது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக அஹிம்சை வழியில் போராடிய போதெல்லாம் அடக்கப்பட்டார்கள்; துன்புறுத்தப்பட்டார்கள். அஹிம்சை ரீதியாகப் போராடிய தந்தை செல்வா உட்பட ஏனைய தலைவர்களினால் சிங்கள அரசுகளோடு அரசியல் உரிமைக்காக எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் சிங்களப் பேரினவாதிகளாலும் பௌத்த மதத்தின் பேராலும் திட்டமிட்டு கிழித்தெறியப்பட்டன. இன்று தமிழ் மக்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கான அஹிம்சைப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக முனைப்புப் பெற்று, ஒரு தலைமையின் கீழ் மிகவும் பலத்தோடு நிற்கின்றது.

இந்த நிலையில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடம் கடந்த நிலையிலும் தமிழ் மக்களது வாழ்க்கையில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக பாரிய யுத்த நிறுத்த மீறல்களில் சிறிலங்கா இராணுவம் ஈடுபடுவதனூடாகவும் தனது இராணுவத்துணைக் குழுக்களின் மூலம் தமிழ் மக்கள மீதான நிழல் யுத்தத்தினையும் பாரிய இராணுவ அழுத்தங்களையும், திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளையும் ஏற்படுத்திவருகின்றது.

அரசியல் உரிமைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் சிங்கள பேரினவாதிகளால் கிழித்தெறியப்பட்டன. இன்று தமிழ் மக்களின் பொறுமையினை சீண்டும் உச்சகட்டச் செயலாகச் சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான உதவிக்காக உலக நாடுகள் முன்னிலையால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொதுக்கட்டமைப்பினூடாகக்கூட தமிழ் மக்கள் தமக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளைப் பெற்றுவிடக்கூடாது என்பதில் சிங்கள பௌத்த பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கின்றது என்று அதில் உள்ளது.

★ ★ ★

**யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்**

சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கு எந்த வகையான உரிமைகளும் கிடைத்துவிடக்கூடாது என்பதில் முனைப்பாகச் செயற்படுவதை இன்றைய அரசியல் கள நிலைவரம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இதனைக் கடல்கோள் அனர்த்த மீள்கட்டுமானப் பணிக்காக உருவாக்க உத்தேசித்திருக்கும் பொதுக்கட்டமைப்பு என்கின்ற நிவாரணப் பணிக்கான அமைப்பினைக்கூட தமிழ் மக்களுடன் இணைந்து மேற்கொள்ளக்கூடாது என்று அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் இனவாத கட்சியான ஜே.வி.பியானதும் மத வெறி பிடித்த பிக்குமாரின் சிஹல உறுமய கட்சியினதும் போக்கு தெளிவாகக் காட்டுகின்றது.

சிங்கள அரசினைப் பொறுத்தவரையில் காலத்துக்காலம் ஆட்சிப்பீடம் ஏறும் ஆட்சியாளர்கள் மாறுகின்றார்களே தவிர, அவர்களது இனவாதப் போக்கில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

தந்தை செல்வா தொடக்கம் பல்வேறு தமிழ்த் தலைவர்கள் தமிழர்களின் உரிமையினைக் கேட்கின்ற வேளைகளில் எவ்வாறு அதனைத் தட்டிக் கழித்தோ அதே பாணியில் தான் இன்றும் சிங்களப் பேரினவாத அரசுகள் இழுத்தடித்துக்கொண்டு ஏமாற்றுவித்தைகளையே காட்டிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், இன்று தமிழர்களின் ஏகபிரதிநிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற தமிழர் படையுடன் பலமான நிலையில்தான் தமது உரிமையினைக்கேட்டு நிற்கின்றார்கள். எனவே, இனியும் சிங்கள தேசம் தமிழர்களின் உரிமைகளைக் கொடுக்க இழுத்தடிக்குமாக இருந்தால் தமிழர்களுக்கு இருக்கும் ஒரே வழி பிரிந்து சென்று தனிநாடு அமைப்பது ஒன்றுதான் என்பதனை சிங்கள தேசம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும் - என்று அதிலுள்ளது.

★ ★ ★

**பல்கலை ஊழியர் சங்கம்**

இலங்கைத்தீவில் தமிழரின் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் ஆரம்பித்து சிறிலங்கா அரசிற்கும் தமிழர் தலைவர்களும் இடையில் காலத்துக் காலம் ஏற்பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்தாது கிழித்தெறிவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் தொடர்ந்து வெற்றி கண்ட சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று மீண்டும் ஒரு கொடூர நாடகத்தை அரங்கேற்ற ஆரம்பித்துவிட்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திறக்கப்பட்ட சமாதானக் கதவுகளை நிரந்தரமாகவே மூடுவதற்கான தீர்க்கமான முயற்சியில் தற்பொழுது சிங்கள பௌத்த பேரினவாதம் இறங்கிவிட்டது.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அவசியமான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கூடத் தயாரில்லாத இப் பேரினவாதம், மறுக்கப்பட்ட தமிழர் உரிமைகளை வழங்குவதற்கு முன்வருமென சுயசிந்தனையுடைய எவருமே இனிமேலும் கூற முடியாது.

சிறிலங்கா அரசும் அதில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியும் பௌத்த குருமாரின் ஹெல உறுமய போன்ற அமைப்புகளும் பேரினவாத கோட்பாடுகளால் இறுக்கமாக ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவையே. தமிழ் மக்களின் இருப்பை இல்லாது ஒழிக்க அவர்கள் கையாளும் தந்திரோபாயங்கள்தான் வேறுபடுகின்றன. தான் மிகுந்த அழுத்தத்தில் இருப்பதாகவும் அதற்கு மத்தியிலும் பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட தயாராகி வருவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி கூறுவது காலத்தை இழுத்தடிக்கும் வஞ்சக நோக்குக கொண்ட தந்திரோபாயமாகும். இந்தக் கால இழுத்தடிப்பு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதற்கானதாகும்.

தமிழ் மக்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளைப் புறந்தள்ளி, துவம்சம் செய்வதற்காக முனைப்புடன் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதம் கடந்த சில நாள்களாக அராஜக செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. அடுத்துவரும் நாள்களில் இச்செயற்பாடுகள் உச்சம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தெளிவாகத் தென்படுகின்றன.

இத்தருணத்தில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தலும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகுவே.பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களின் இழந்த இறைமையை மீட்டு எடுப்பதற்கான தீர்க்கமான முடிவினை எடுக்கும் காலம் வந்துவிட்டது என தமிழ் மக்களாகிய நாம் கருதுகின்றோம். தமிழ் மக்களின் தலைவிதியை தமிழ் மக்களே தீர்மானிக்கின்ற அடுத்த கட்ட வரலாற்று நகர்விற்கு தமிழ் மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பதைச் சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும் என்று அதிலுள்ளது.

★ ★ ★

**பொது அமைப்புகளின் ஒன்றியம்**

இலங்கைத்தீவில் தமிழர்கள் பூர்வீகக் குடிகள். இவர்களுக்கு பாரம்பரியமான வரலாற்றுப் பின்னணிகள் உண்டு. சிங்கள மக்களுடன ஐக்கியமாகவே வாழவிரும்பினர். ஆயினும், சிங்கள ஆட்சியாளரும் பௌத்த பேரினாவதிகளும் திட்டமிட்டு பல்வேறு தடைகளைப் போட்டு தமிழ் - சிங்கள ஒற்றுமையை குழிதோண்டிப் புதைத்த கறைபடிந்த அந்த வரலாறு தமிழர்களைக் காயப்படுத்தியுள்ளது. இருந்தபோதும் அவர்கள் ஒற்றுமையாகவே வாழ விரும்பினர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழர் உரிமைக்காகப் போராடிய தலைவர்கள் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் எள்ளி நகையாடப்பட்டு, தாக்குதலுக்கு ஆளாகி வந்தனர். தமிழ்த தலைவர்கள் அஹிம்சை ரீதியாக கால்நூற்றாண்டு காலமாகப் போராடினர். அப்போராட்டம் அனைத்தும் ஆயுதப் பலம் கொண்ட சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டது. தமிழ்த் தலைவர்களால் உரிமைக்காக எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் எழுதிய மை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 27-06-2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஊர்காவற்றுறை பிரதேசசபைச் செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணைக்கு அமைவான ஒப்பந்தகாரர்கள் 24-06-2005ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்னர் குறிப்பிட்ட தொகையைப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுகொள்ளலாம்.
02. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *"செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை, ஊர்காவற்றுறை"* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித் தெரு ஒழுங்கை, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விகள் 27-06-2005ஆம் திகதி பி.ப 1.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
04. கேளவிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்கு உரிமையுண்டு. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலை | வேண்டப்படும் இக்ராட் தரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01. | அயித்தாம்புலம் வீதி மீளமைப்பு வேலை | M-9 | ரூ.575.00 | ரூ.6250.00 |
| 02. | ஊர்காவற்றுறை மீன்சந்தை திருத்தம் | M-9 | ரூ.575.00 | ரூ.4750.00 |
| 03. | காரைநகர் வடக்கு மீன் சந்தை சுற்றுவேலி (முட்கம்பி) வாயிற்கதவு அமைத்தல் | M-9 | ரூ.575.00 | ரூ.1350.00 |
| 04. | குப்பையேற்றும் கைவண்டில். இரண்டு சில்லு உழவு இயந்திரத்திற்கான இழுவைப் பெட்டி அமைப்புவேலை. | - | ரூ.575.00 | ரூ.3300.00 |

ஏ.கணேசானந்தராஜா,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

பிரதேசசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை
13.06.2005 (சி-43341)(26-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குமரையா துரைராஜா

[இளைப்பாறிய பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி]

தோற்றம் 01-01-1936 — மறைவு 13-06-2004

திதி : 02-06-2005

இவர் நம்மைவிட்டு மறைந்து
ஓராண்டு ஆகிவிட்டாலும்
இவரின் மறைவை மறவாது
நினைவு கூரும்

மனைவி, மகள், மருமகன், பேரன்.

82, லோரன்ஸ் வீதி,
கொழும்பு -4. (36489)(46-14-26)

தகவல்: சண்முகம்
குகபாஸ்கரன்,
உடுவில், சுன்னாகம்.

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜூன்13

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில இன்று திங்கட்கிழமை தொடக்கம் 4தினங்களுக்கு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றபபடவுள்ளது.

இன்று திங்கட்கிழமை மானிப்பாய் தாவடி வீதியில் சுதுமலை அம்மன் கோவிலடி, மயில்வாகனம் கடையடி, குண்டடி வாசிகசாலையடி ஆகிய இடங்களிலும் -

எதிர்வரும் 15ஆம் திகதி சுதுமலை சாவற்கட்டு வீதியில் அரசடிச் சந்தி, ஞானவைரவர் கோயிலடி, ஐங்கரன் வீதி ஆகிய இடங்களிலும் -

எதிர்வரும் 16ஆம் திகதி சாவற்கட்டு 100 வீட்டுத்திட்டம் - இணுவில் மானிப்பாய் வீதியில் சாவற்கட்டு சந்தையடி, அம்மன் கோவிலடி, கடற்றொழிலாளர் சங்கம் ஆகிய இடங்களிலும் -

எதிர்வரும் 17ஆம் திகதி சுதுமலை அம்மன் கோவில் சுற்றாடல் வீதியில் நாயகன் சனசமூக நிலையம், ஈஞ்சடி வைரவர் கோயிலடி ஆகிய இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

(எ-202-185)

## நிவாரண முத்திரை விநியோகம்

வலி.தென்மேற்கு,ஜூன்13

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்திற்குச் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக 33ஆம் கட்டத்திலிருந்து 52ஆம் கட்டம் வரையிலான நிவாரண முத்திரைகள் கிடைத்துள்ளன.

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் மூலம் இம்முத்திரைகளுக்கான பொருள்கள் விரைவில் விநியோகம் செய்யப்படவுள்ளன. (எ-135)

## தமிழர்களின் நலனுக்கான...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

காய்வதற்குள் கசக்கி எறியப்பட்டன. தமிழ்த் தலைவர்கள் அஹிம்சை ரீதியாகப் போராடி தமது இயலாமையை வெளிப்படுத்தியபோது வேறு வழியின்றித் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர்.

அன்று தொடங்கிய தமிழர்களின் ஆயுதப் போராட்டம் இன்று கூர்மையடைந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரண்டு தமது இழந்துபோன தாயகத்தை மீட்கப் போராடி வருகின்றனர். அரசியல், இராணுவ ரீதியாகத் தமிழ் மக்கள் பலம்பொருந்தி நிற்கின்ற இன்றைய சூழலில்கூட சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்க முன்வரவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் பேச்சு நடைபெற்றும் போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு கிட்டவில்லை.

தமிழர்கள் தாம் சுதந்திரமாக வாழ்வதற்குத் தமக்கென்று என ஒரு தனிநாடு அமைந்தால்தான் தாம் சுதந்திரமாக வாழமுடியும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தனர். தனிநாட்டுக்காகப் போராடிய தமிழர்களுக்குத் தமிழீழம்தான் முடிந்த முடிவு. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்கவில்லை. அப்போதுதான் சிங்கள ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகளிடம் தன்னாட்சி அதிகார சபையினை வழங்க முன்வந்தார்கள். அதனால்தான் விடுதலைப் புலிகளினால் தன்னாட்சி அதிகார சபை முன்வைக்கப்பட்டது. இதனையும் சிங்கள ஆட்சியாளர்கள் வழங்க முன்வரவில்லை. இடையே சுனாமி வந்தது. பொதுக்கட்டமைப்பை சிங்கள ஆட்சியாளர்கள் தருவோம் என்றார்கள்; இப்போதும் ஒன்றும் இல்லை என்கிறார்கள். தமிழ் மக்களுககு எந்தவிதமான உதவியும் கிடைக்கக் கூடாது என்பதில் சிங்களப் பேரினவாதிகள் உறுதியாக நிற்கிறார்கள். மேலும் ஒருபடியாக ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளும தமிழர்களை விழுங்கிவிடவே முயற்சிக்கின்றன.

தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் புறந்தள்ளிப்பட்டு தமிழ் இனத்தை அழிப்பதற்காகச் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதிகளும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போனற கட்சிகளும் முனைப்பான அராஜகச் செயற்பாடுகளில் கடந்த சில நாள்களாக ஈடுபட்டு வருகின்றனர். இது முழு இலங்கையையும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும் என்று அதிலுள்ளது. (எ)


## அப்பளம் தயாரிக்க மா

அப்பளம் தயாரிப்பதற்கேற்ற தனி உழுந்துமா விற்பனைக்கு உண்டு.

**M.G.M. & ஸ்ரோர்ஸ்**

இல.777, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். ☎ 222 7894
(36445)(29-14-45)

## ஓவ் செற் மெசின் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஜப்பான் தயாரிப்பான HAMADA 700 CD (A3) ஓவ் செற் மெசின் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
T.P.: 0776038312, 0773144621
(36478)


## சேவை நிறைவும் பாராட்டும்



சேவையில் நிறைவு காணும்
உயர்திரு.சின்னையா தேவராசா
ஆசிரியர் சேவை நிறைவு 10.06.2005

பன்னிரு ஆண்டின் மேலாய்- எம்
பள்ளியின் பணிகள் ஓங்க
எண்ணம் சொல் செயலாய் என்றும்
இயங்கினீர் நன்றி; வாழி!

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
கோண்டாவில். (36475) (39-14-26)
- ஆசிரியர் நலன்புரிக் கழகத்தினர்.


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

14-06-2005 - 19-06-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்
☆ நித்திரைக் குறைவு ☆ ஆண்மைக் குறைவு ☆ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடினடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: *இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.*

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-43361) (26-14)


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக கைத்தொழில் போதனாசிரியர்
**மயில்வாகனம் புஸ்பவதி** அவர்களின் அன்பு மாமி

### திருமதி கந்தையா பாக்கியம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குபற்றுவதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி, பளை.

உதவிப் பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.
(36488)(26-14)

## நன்றி நவில்லல்

கடந்த 04-06-2005 அன்று காலமான
எமது குடும்பத் தலைவர்
பேராசிரியர்

### செல்லத்துரை சிவஞானசுந்தரம்
(நந்தி)

அவர்கள் நோயுற்றிருந்தவேளை அவரை அன்புடன் பராமரித்து உரிய சிகிச்சைகள் வழங்கிய யாழ்ப்பாணம் போதனா வைததியசாலை வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், அன்புடன் நலம் விசாரித்த அன்பர்கள் மற்றும் அமரராகிய பின்னர் அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு அனுதாபந்தெரிவித்தவர்கள், தொலைபேசி, தந்தி, அனுதாப அட்டைகள் மூலம் அனுதாபந்தெரிவித்தவர்கள், இறுதி அஞ்சலி நிகழ்வை நடத்திய மருத்துவபீட மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு எமது குடும்பம் சார்பாக நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (36483)(26-14)

681/2, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
நந்தி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா குகதாஸ்

(ஆசிரியர், இளவாலை புனித என்றியரசர் கல்லூரி, POG)



மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குகதாஸ் அவர்கள் 10-06-2005இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் மதியாபரணம் அவர்களின் ஏகபுத்திரனும் பத்மநாதன் - அன்னபூபதி அவர்களின் அன்பு மருமகனும் பவானி அவர்களின் அன்புக் கணவரும் சகானா, மோசீகரன், ரசிகரன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈஸ்வரதேவி (கொழும்பு), உமைபாலன (பிரான்ஸ்), தேவகி (அமெரிக்கா), இரகுநாதன், நிமலன் (கனடா), இரவீந்திரன் (கனடா), ஐங்கரன் (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-06-2005) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இளவாலை புனித என்றியரசர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு மாலை 4.00 மணியளவில் அளவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (36501)(26-14)

தகவல்:
மனைவி

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட LOVE BIRDS. நல்லின பல வகையான புறாக்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம், இல.01, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. (36479)

TVS FIERO (F2) WPJR xxxx இலக்க முடைய நீல நிறமான மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம், இல.01, மகாத்மா வீதி, நெல்லியடி.
T.P: 0777 779975 (36478)

### உடன் விற்பனைக்கு

பாவனையிலுள்ள கொம்பியூட்டர், மொனிற்றர், எப்சன் பிறிண்டர் LQ300+ ஓடியோ டெக் (AKAI) பனசொனிக், ரெலிபோன் றிசீவர், ஈகுலைசர் விற்பனைக்குண்டு. தொடர்பு: அபிராமி, இல.768, K.K.S. றோட், தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். T.P.: 8044 (36470)

### மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்கம், 24-12-1976, அவிட்டம், முதலாம் பாதம், 25 3/4, கிரக பாவ சங்கியை, செவ்வாய் தோஷமற்ற, உயரம் 5'3", கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை உடைய மணமகனுக்கு உள்ளூரில் மணமகளைப் பெற்றோர் எதிர்ப்பார்க்கின்றனர். தொடர்பு: ஆனந்தி திருமண சேவை, இல.01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (36502)

**SKY COMPUTER SYSTEM**
No.109, Kandy Road,
Chundikuli, Jaffna.
Hot line: 0777 222478

**விற்பனைக்குண்டு**

**Pentium III 500MHZ IBM Computer with Multimedia**
10GB Hard Disk
128 MB RAM
15" Monitor
25,500/-
ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited soft ware & free dust cover
அரசாங்க ஊழியர்களுக்கு தவணைமுறையில் பெற்றுக்கொள்ளும் வீசேட சலுகை உண்டு.
Pentium III 533 - 26,000/-
Pentium III 600 - 27,500/-
Pentium III 667 - 29,250/-
கச்சேரிக்கு அருகில்.
(சி-4363)(24-14)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், 13.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம், தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் -திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூரிலும் பெற்றுக்கொள்ளலாம். (36282)

### மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், மணமகன் 36 வயது, இங்கிலாந்து ஆங்கிலேய நிறுவனத்தில் தகுந்த கல்வியுடன் உதவி முகாமையாளர், சகோதரி 39 வயது அழகானவர், இளமைத் தோற்றம் மிகச் சிறந்த சீதனமுடையவர். இவர்களுக்கு மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தந்திற்கும் விருப்பமுண்டு. (தரகுப் பணமும் வழங்கப்படும்) தொடர்பு: விளம்பர இல. 2615, மே/பா உதயன். (36417)

### தவறிவிட்டது

விக்னராஜ குருக்கள் வசந்தகுமாரி என்பவரது தேசிய அ.அட்டை (547314212V) 24-05-2005 அன்று ஓமந்தைக்கும் புளியங்குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.விக்னராஜ குருக்கள் மே/பா அருளையா, அச்செழு, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (36473)

### காணி விற்பனைக்கு

இராச வீதியில், நவக்கிரி சந்திக்கு அருகில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் கிணற்றுடன் கூடிய 16 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 222 3772 (36470)

### பொதுக்கூட்டம்

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 65ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். (எ-117)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில; பாலர் வகுப்பில் இருந்து மேற்படிப்பு வரை By: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (36510) (24-14)

### ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

வலி.தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம எதிர் வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

மேற்படி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குத் திணைக்களத் தலைவர்களைக் கலந்துகொள்ளுமாறு உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கேட்டுள்ளார். (3-185-139)

### கடற்றொழிலர் குழுக்கூட்டம்

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கடற்றொழில் சமாசங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தலைமையில் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கடற்றொழிலாளர், கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகள், சம்மேளனப் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி ஆகியோரை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கடற்றொழில நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் கேட்டுள்ளார். (3-ரி)

**வெற்றிடங்கள்**

1. Auto CAD Draughtsman - Mechanical
2. Accounts Clerk (கணக்கு லிகிதர்)
3. Store keeper (பண்டகசாலைப் பொறுப்பாளர்)
4. Lathe - man (கடைச்சல் இயந்திர இயக்குநர்)
5. Labourers (வேலையாள்கள்)

மேற்படி வெற்றிடங்களுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய திகதி 2005–06–13 தொடக்கம் 16 வரை

தொடர்பு: திட்ட முகாமையாளர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல.: 021 222 5780 (C/43355)(46-14-24)

## care கெயர் சர்வதேசம்

### மூலப்பொருள்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

கெயர் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்ட நடவடிக்கைகளுக்காகப் பின்வரும் பொருள்களைப் பருத்தித்துறை திட்டப் பிரதேசத்தில் விநியோகிப்பதற்குத் தகுதியான விநியோகஸ்தர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1) சல்லிக்கல்
2) மரம்
3) சிமெந்து
4) கண்டகல் (6"-9")

இதுதொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களைப் பெறுவதற்கும் பருத்தித்துறையில் உள்ள கெயர் அலுவலகத்துடன் கடமை நேரத்தில் தொடர்புகொள்ளவும். இதற்கான விண்ணப்பங்களை 20-06-2005 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பருத்தித்துறை கெயர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு:- மர விநியோகத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது மர விநியோக பதிவுச்சான்றிதழையும், தொகையாக வழங்கிய அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.

திட்டப்பணிப்பாளர்,
கெயர் சர்வதேசம்,
சாரையடி,
பருத்தித்துறை.
தொலைபேசி: 021-2264259
தொலைநகல்: 021-2264260
(C/43359)(46-14-24)



## கிறீன்-பலஸ்-எம்போறியம்

மலிவு விலைதானா என்பதை அறிந்துகொள்ளவும்
நாளைய நாகரிகத்தை முதன்முதலில்
இன்றே அறிமுகம் செய்தவர்களா என்பதைப்
பார்வையிடவும் ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்.

**யாழ்நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்!**
**நிகரில்லாத் தரங்கள்!**
**அழகிய புடைவைத்தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்.**

- சந்திரமுகி
- சச்சின்
- ஜித்தன்

புதிய சாறிவகைகள்! ஸ்கேட் அன் பிளவுஸ்–புதியரகம்

கண்ணைக் கவரும் புத்தம் புதிய டிசைன்கள்

- பொக்ஸ் சேட்
- டெனிம்
- விதம் விதமான சுபமுகூர்த்தப்பட்டுப் புடைவைகள் அனைத்துமே வியத்தகு மலிவு விலையில் கிடைக்கும்

*இன்றே வாருங்கள்!*

**கிறீன் பலஸ் எம்போறியம்**
**பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,**
**திருநெல்வேலி.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி அதிபர்
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின்
பாசமிகு மாமியார்

**திருமதி சிரோன்மணி சிவசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (36499) (42-11-45)

**ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.**

## கொழும்பு விலையில் விசேட கழிவு

சில்லறை, மொத்த வியாபாரிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட
- ❖ தொப்பி வகைகள்
- ❖ பெல்ட்
- ❖ COOL BOY ஜென்ஸ் சொக்ஸ்
- ❖ பேபிசூட்

மற்றும் ஏராளமான தெரிவுகள் கொழும்புவிலையில். மொத்த வியாபாரிகளுக்கு விசேடகழிவு.

**றிபைன்**
3,யும்மா பள்ளி ஒழுங்கை,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

T.P.: 077 3144399

※ பெரியகடை வீதியில் வரும்போது முதல் பள்ளி ஒழுங்கையில் முதல்கடை

(36468)(42-11-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய நண்பன் தி.சத்தியசீலனின் அன்புத் தந்தை

**அமரர் பிள்ளையார் திருநாவுக்கரசு**



பாசக்கரம் நீட்டி நேசித்த உத்தமனே
பண்பும் அன்பும் கொண்ட நல்லவனே
நேசித்த உன் உறவுகளை
தவிக்கவிட்டுச்சென்றதுதான்
தாங்காது வருந்துகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
**ஆசிரியர், மாணவர்கள்.**
**(NIIT)**

(ச-43379) (42-11-45)

## IN MEMORIAM
## 96 ஆவது பிறந்ததினம்



**அமரர்**
**V.M.குமாரசுவாமி**
(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி)

இன்று உங்களை
நினைவு கூருகின்றோம்.


மல்லாகம்.

**கு.விசுவலிங்கம்**
**குடும்பத்தினர்**
**உற்றார், உறவினர்.**

(36503) (42-11-45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 - 10 - 1948



மறைவு
24 - 05 - 2004

**அமரர் நாகலிங்கம் பரமானந்தம்**

ஷஷ்டி- திதி

மண்ணுலகில் நாம் சிட்டாய் பறந்துலாவ
விண்ணகத் தேவர்க்கு பரமானந்தமானீரே! அப்பா!
எண்ணற்ற ஆண்டு பல சென்றால் என்ன?
எண்ணமதில் அழியா ஓவியம் நீ

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(ச-43373) (39-11-46-42)

**- குடும்பத்தினர்.**


# வாக்காளர் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,ஜுன்13

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியின் வாக்காளர் பட்டியல் இன்று திங்கட்கிழமை தொடக்கம் யாழ்.மாவட்ட மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

இவ் வாக்காளர் பட்டியல்கள் ஏனைய சகல மாவட்டங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் -

சகல கிராம சேவையாளர் பிரிவுகள், பிரதேச செயலகங்கள், தபால் நிலையங்கள், மாவட்டத் தேர்தல் அலுவலகம், மாநகரசபை என்பவற்றில் பார்வையிடலாம் என்றும் யாழ்.மாவட்டத் தேர்தல் ஆணையாளர் எஸ்.குகநாதன் தெரிவித்தார்.

பெயர் தவறவிடப்பட்டவர்கள் தமது பெயர்களை எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் பதிவு செய்யலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(3-202-203)

# கட்டமைப்புக்கு எதிராக களணிப் பல்கலையில் போராட்டம

கொழும்பு,ஜுன்13

உத்தேச பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத தெரிவித்து களணிப் பல்கலைக்கழக மாணவாகள் சிலர் நேற்றுமுன்தினம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சத்தியாக்கிரகத்தில் எட்டு மாணவர்கள கலந்துகொண்டுள்ளனர் என்றும் இது தொடர்ந்து நடைபெறுமெனவும் பல்கலைக்கழக மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையிலும் தாம் ஈடுபடத் தயங்கப் போவதில்லை என்றும் மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3-13)

# வகுப்பறைத் தொகுதி திறந்துவைப்பு

தென்மராட்சி,ஜுன்13

பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 'நிகொட்' நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இருமாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதி கடந்த 9ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகம் இக்கட்டடத் தொகுதியினைத் திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் திருமதி இ.குமாரவேலு தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், கிளிநொச்சி வலயக் க்ல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, பளை உதவிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, பளை கோட்டக் கல்வி அலுவலர் சி.இராமலிங்கம், பளை உதவிப்பங்குத் தந்தை அருட்திரு.வசந்தசீலன் அடிகள், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(எ-117)


**இந்தியாவில் படியுங்கள்**

2005 உயர்தரப் பரீட்சைக்குப் பிறகு பெறுபேறுகளை எதிர்பார்ப்பவர்கள்.

**பிருந்தாவன் கல்லூரி**

முன்னர்
தேசிய முதல் தரக் கல்லூரி
பெங்களூர் பல்கலைக்கழகம்
**இந்தியா**

பட்டப்படிப்பு பாடநெறிகள்
- B.Sc. உயிரியல் தொழில்நுட்பம்
- B.Sc. மரபியல்
- B.Sc. நுண் உயிரியல்
- B.Sc. கணனி விஞ்ஞானம்
- B.B.M. தொழில் முகாமைத்துவம்
- B.C.A. கணனிப் பிரயோகம்

**பட்டப்பின்படிப்பு பாடநெறிகள்**

**M.Sc., M.B.A., M.C.A.**

2005 ஒகஸ்டில் பாடநெறிகள் ஆரம்பம்

- ★ 42 தேசியத்தவர்களுடன் கற்றல்.
- ★ 250 இலங்கையர்களுடன கற்றல்.
- ★ 350 இலங்கை மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழக கல்லூரியில் கற்று ஏற்கனவே பட்டங்களைப்பெற்றுள்ளனர்.
- ★ தவணை முறையான கட்டணத் திட்டம் உண்டு.
- ★ 2005 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பெறுபேறுகளை எதிர்பார்க்கும் நிலையில் இட ஒதுக்கல் பெறலாம்.
- ★ இட ஒதுக்கல் கட்டணம் US $ 400.

**வெப்சைட்டில் பாருங்கள்.**
www.brindavan College com.
E-mail அனுப்புக.
Inquiry @brindavan college com.
Unifo@brindavan college com.

**COMPANY SECRETARIAL SERVICES (PVT) LTD.**
No. 285C 1/1, Stanley Tillakaratne MW Nugegoda.
011 285 4438 -0777 317043


# நாட்டுக்கூத்து நூல் வெளியீடு புதனன்று

யாழ்ப்பாணம்,ஜுன்13

பாசையூர் புனித அந்தோனியார் திருநாளை முன்னிட்டு உதயதாரகை கலை மன்றத்தின் ஏற்பாட்டில் முத்தரக்கவிஞர் கலாபூசணம் ஆசீர்வாதம் செகராசசிங்கம் எழுதிய 'சம்பூர்ண அரிச்சந்திரா' என்னும் தென்மோடி நாட்டுக் கூத்து நூல் வெளியீடு நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 6 மணிக்கு அந்தோனியார் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயில் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைஞர் அ.ஸ்ரீபனும் சிறப்பு விருந்தினராக அண்ணாவியார் இராஜேந்திரத்தின் புதல்வர் ரி.எம்.அன்ரனிப்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(3-203)





## கண்ணீர் அஞ்சலி




**அமரர்**
**கந்தையா குகதாசன்**

மனிதரில் தெய்வமாய் மாண்புடன் வாழ்ந்தீர்
புனித வாழ்வில் கண்ணியமும் நேர்மையும் தவறாது
சேவையே பெரிதென வாழ்ந்த செம்மலே! எங்குற்றாய்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்

புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை. (36509)(42-11-45)

**- கல்லூரிக் குடும்பம்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**இராசசிங்கம் பாலசுப்பிரமணியம்**
உதயம்: 18.09.1942
சயனம்: 14.05.2005



**பாலசுப்பிரமணியம் ரமேஸ்**
உதயம்: 16.08.1971
சயனம்: 26.04.2005

இருசோடி விழிகளின் மீளாத்தூக்கத்தால்
ஈரவிழிகளுடன் தேம்பிநிற்கின்றோம்
நேற்றுப்போல் உள்ளதையா - உங்கள்
முகம் மறைந்து திங்களொன்றானதையா!

இறையடி சேர்ந்த எம் குடும்பவிளக்குகளின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். ஆகவே, அந்நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"விமலகிரி",*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

**- குடும்பத்தினர்.**
(36505)(42-11-45)

## 25ஆவது ஆண்டு நினைவஞ்சலி



*அமரர் சி. க. தம்பையா ஜே.பி*

(சமூக சேவையாளரும், நயினாதீவு கிராமசபைத் தலைவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை ஆயுள்காலத் தலைவரும், யாழ். கொட்டடி ஸ்ரீ கலைஅலங்காரம் உரிமையாளரும்)

அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி அருளும் தலத்தில்
ஆண்மை மிக்க மனிதனாய் மணிபல்லவத்தில் வாழ்ந்து
இல்லற வாழ்வைச் செல்லக் கண்ணுடன் நடத்தி
ஈன்ற மகன் ஸ்ரீயைச் சட்டத்தில் உயர்த்தி
உலகம் போற்றும் சட்ட வல்லுநராக்கி
ஊக்கத்துடன் அமுதசுரபியின் தொண்டனாய்
எங்கள் கிராம மக்கள் தலைவனாய்
ஏணிபோல் எல்லோரையும் உயர்த்தி - தம்
ஐயா உங்கள் அடிச்சுவட்டில்,
ஒற்றுமை ஒளி ஓங்கி ஒளிரும்
ஓர் இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்தும்
ஔடதமாக நிற்கும் உங்கள்...

(36463) (54-45-17)

தகவல்: பூ. சந்திரகுமார் (பேரன்)
மணியர்பதி லேன், கொக்குவில் மேற்கு.

மகன் ஸ்ரீபதி, மருமகள், பேர்த்திமார், சகோதரி, உறவினர், நண்பர்கள்.

## பாண் விலை மாற்றம் சம்பந்தமாக அவசர கலந்துரையாடல்

இன்று (13.06.2005) திங்கள் காலை 9 மணிக்கு எமது சங்கப் பணி மனையில் பாண் விலை மாற்றம் சம்பந்தமாக மிக முக்கிய தீர்மானம் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் குறித்த நேரத்துக்கு தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முக்கிய குறிப்பு: யாழ். மாவட்டத்துக்கான பாணின் நியாயமான விலை நாளைய பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும். (சி-43384)(30-18-34)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## நீங்கா நினைவில் ஒன்பதாம் ஆண்டு

அன்னை மடியில்
21 - 02 - 1977



அமரன் அடியில்
13 - 06 - 1996

## செல்வன் வேலு சனகன்

(முன்னாள் மாணவன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஒன்பது ஆண்டுகள் ஆனாலும் எம்துயர் என்றும் மாறாது! என்றும் உன்நினைவுகளோடும் உணர்வுகளோடும் கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (36514)(30-18-34)

அம்மா, அக்காமார்,
தங்கை, அத்தான்மார்,
மருமகள், மருமகன்.

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்
## முருகேசு விஸ்வநாதன்

மலர்வு 05-08-1943 — உதிர்வு 25-05-2004

திதி: 13.06.2005
பூர்வபக்க ஷஷ்டி

பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
அன்பின் அணிகலனாய் வாழ்வாங்கு வாழ்ந்து
நல்வழிகாட்டி எம்மை வாழ வைத்த – தெய்வமே!
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள் மறைந்தாலும்
என்றும் எம் நெஞ்சங்களில் வாழும் உன் நினைவுகள்

கதிரைவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

நீங்கா நினைவுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



எமது குடும்பத்தில்
ஒளி விளக்காகத் திகழ்ந்து
எம்மை விட்டுப்பிரிந்த
எமது குடும்பத் தலைவர்

## சதாசிவம் கணேஸ்வரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (13.06.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் கலந்துகொள்வதுடன் அதைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பழைய
தபாற்கந்தோர்
ஒழுங்கை,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி சிரோன்மணி சிவசுப்பிரமணியம்**

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் எமது கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் எனது இணைப்புச் செயலாளருமாகிய எஸ்.சுசீந்திரன் (அகில இலங்கைச் சமாதான நீதிவான்) அவர்களின் அன்புப் பேர்த்தியுமாகிய

**திருமதி சிரோன்மணி சிவசுப்பிரமணியம்**

அவர்கள் 11-06-2005 இல் காலமாகிவிட்டார். அன்னாரின் மறை வையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்துசிவலிங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்,
தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக
அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்து
அமைச்சரும்,
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்
நிதிச்செயலாளரும்.
(சி-43380)(30-18-34)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கோபாலசிங்கம் (கோபாலு)



பூநகரியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலசிங்கம் அவாகள் நேற்று (12.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரமுத்து - ஆச்சிமுத்து தம்பதியினரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தியாகராஜாவின் அன்புச் சகோதரரும் விநாயகமூர்த்தி, துரைராஜா, கமலாதேவி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சாந்தினி (கனடா), ஜெயலட்சுமி (கனடா), ஜெயகுமாரி (கனடா), சறோஜினி (கோண்டாவில்), வனஜா (கனடா), பவகோபிதன் (கனடா), டக்சியா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன் (தீசன் - கனடா), பாலமோகன் (கனடா), நிமலராஜ் (கனடா), குலேந்திரராஜா (யாழ். வைத்தியசாலை ENT கிளினிக்), விபுலன் (கனடா), கவிதா (கனடா), துஸ்யந்தன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் தாரணி, அனுராகவன், அபிராமி, நிஷாந்தன், சஞ்சீவன், அபீனா, பிரவீனா, நிலுஷன், பானுஷன், ஜனுஷன், அபீஷா, ஹரிஷன், சங்கவி, கோபிஷாந் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), திசோபிகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை கோண்டாவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (36517)(30-18-39)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

### மாகிறேட் (செல்லக்கண்டு)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாகிறேட் (செல்லக்கண்டு) நேற்று (12.06.2005) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் - எலிசபெத் தம்பதியினரின் அன்பு மகளும் வைத்தி லூக்காஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிளாறம்மா, லோறன்ஸ் மற்றும் லேனாட், சறோஜினி, வின்சன், கென்றி, பிறிஜெட், யூலியற் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோகரன் (ஆசிரியர் யாழ். ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு), விஜயா பீரிஸ (ஆசிரியர், யாழ்.ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு), ஜேறாட் சுவேந்திரநாதன் (ஜேர்மனி), வனஜா விஜேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜேந்திரன் (ஜேர்மனி), பீரிஸ் (யாழ். போதனா வைத்தியசாலை), ஜசித்தா சுவேந்திரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்பகம்,
பண்டத்தரிப்பு. (36524)(30-18-34)

தகவல்:
பீரிஸ் (மருமகன்).

### வைத்திலிங்கம் மார்க்கண்டு

சரவணை மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் மார்க்கண்டு அவர்கள் நேற்று (12.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் தங்கலட்சுமி, கெங்காதரம், தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணரட்ணம், காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் யோகராணி, செல்வரட்ணம் (தபாலகம், வேலணை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரமலர், நஞ்சலாதேவி(பிரதேச செயலகம், சங்கானை), தனபாலசிங்கம், பவளராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தன், நிஜிகேசன், திலக்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரவணை புன்னம்புட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை மேற்கு,
வேலணை. (36517)(30-18-34)

தகவல்:
மா.செல்வரட்ணம் (மகன்).


11.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிதா வாசனாவ
சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300330586 இலிருந்து 300347419 வரை

சீட்டிழுப்பு இல. 164

வெற்றி எண்கள்: 11 61 62 69 — சுப்பர் எண் 15

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,10,77,300/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
| --- | --- | --- | --- |
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,10,77,300/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 33 | 5,000/- | 1,65,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 446 | 1,000/- | 4,46,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,472 | 500/- | 7,36,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,978 | 40/- | 8,79,120/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,897 | 20/- | 4,17,940/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,12,606 | 10/- | 31,26,060/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 82,70,120/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,19,12,500/-

300344911-1-26
300335777-5-92
300330649-4-86
300332095-7-91
300339459-5-34

வளமான வாழ்விற்கு [?]
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை

(உரிமையாளர், ஐங்கரன் ஸ்ரோர்ஸ், கைதடிச் சந்தி, கைதடி)



கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (12.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதிகளின் மூத்த மகனும் தனேஸ்வரியின் அன்புக் கணவரும் வாகீசன், இரதீஸ், சுவாஸ்ரிகா, தசாந ஆகியோரின் அன்புத தந்தையாரும் ஐங்கரன், மகேஸ்வரி, மங்களேஸ்வரி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ரத்தினம்மா (கெருடாவில்), நவரட்ணம், இராஜேஸ்வரி, நடராசா, மகேஸ்வரி, இராணியம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை மதியம் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி. (36521)(30-18-34)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,


நாதன்ஸ் சினிமா — ஆசனத்தரிமை குளிரூட்டப்பட்டது. — யாழ்ப்பாணம்.

இன்று முதல்
"இன்டி பெண்டன்ஸ் டே" டைரக்டர்
ரோலண்ட் எம்ரீச் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்!

THE DAY AFTER TOMORROW
நாளை மறுநாள் (தமிழாக்கம்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

சுனாமி போன்ற அழிவுகளை சித்திரிக்கும்.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இன்று முதல்
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஜித்தன் (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்

14 வரை
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
சூர்யா (ரீல்ஸ்)
ஆக்ஷன் படம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)

# கணனிக்கல்வி நிறுவனம் கோண்டாவிலில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்13

சி.பி.கணனிக் கல்வி நிறுவனம் நேற்றுக் காலை கோண்டாவில் ரயில் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. சி.பி.கணனிக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.ஆர்.சுகுமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கல்வி நிறுவனத்தின் காரியாலயத்தை யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கை நெறிப் பீடாதிபதி க.தேவராஜாவும்-

பயிற்சிக் கூடத்தை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் -

விரிவுரைப் பிரிவை உயர் தொழில்நுட்ப நிறுவகப் பணிப்பாளர் ரி.இராஜரட்ணமும் இணையத்தளத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதனும் சி.பி.கணனி சேவைப் பிரிவை சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வி.அருளானந்தமும் நாடாவினை வெட்டித்திறந்துவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பொதுக்கூட்ட நிகழ்வு கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (3-7)

# டைசன் ஓய்வு

முன்னாள் உலகக் குத்துச் சண்டைச் சம்பியன் மைக் டைசன் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். நேற்று முன்தினம் அயர்லாந்து வீரர் கெவின் மெக்பிரைரிடம் தோல்வியடைந்த பின்னரே அவர் இந்த முடிவை அறிவித்தார்.

## பல்கலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய தீர்வு கிடைக்காவிட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாங்களும் ஆரம்பிக்கப் போகிறார்கள் என மாணவர் சங்கத் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இன்று மருதானை ஆனந்தாக் கல்லூரி சந்தியில் இருந்து பகல் ஒரு மணிக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தவிருக்கும் அகில இலங்கை மாணவர் ஒன்றியம் ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவும் திட்டமிட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அண்மித்த தலதா சந்தியில் கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். விரைவில் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# இயலுமான விரைவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக அரசுத் தரப்பில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை ஜனாதிபதி விளக்கினார். முஸ்லிம்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகள், வலியுறுத்தல்கள் என்பவற்றையும் ஜனாதிபதி குறிப்பிட்டுக் காட்டினார்.

இவை தொடர்பாகத் தமது திட்டவட்டமான நிலைப்பாட்டை கூட்டமைப்பினர் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர் எனத் தெரியவந்தது.

இயன்ற விரைவில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவேன் என ஜனாதிபதி அங்கு உறுதி கூறினார்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான காலவரையறை எதையும் ஜனாதிபதி குறிப்பிட்டுக் காட்டவில்லை. ஆனால், அவரது பேச்சிலிருந்து இரண்டு கிழமைக்குள் கூட அவர் அதைச் செய்ய வாய்ப்பு உள்ளது போலப்பட்டது. ஆனால், எவர் அப்போது என்ன செய்யப் போகிறார் என்பதை இப்போதே நாம் திட்டமிட்டுக் கூறிவிடமுடியாது. அவரது போக்கு உங்களுக்குத் தெரிந்ததுதானே...?

ஜே.வி.பி. இந்த அரசைவிட்டு வெளியேறும் என்பதில்கூட ஜனாதிபதி நம்பிக்கை உள்ளவராகத் தெரியவில்லை. அவர்கள் அரசை விட்டு வெளியேறுவதற்கு ஐம்பதுக்கு - ஐம்பது வீதமாகவே சாத்தியம் இருப்பதாக ஜனாதிபதி கருதுகிறார் போலும். சில சமயங்களில் ஜே.வி.பி. இந்த அரசை விட்டு வெளியேறினாலும் தமது அரசு உடனடியாகக் கவிழ்ந்துவிடும் என ஜனாதிபதி நம்பவில்லை என்றே எமக்குப் பட்டது என்றார் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

"தமது அரசுக்கு நெருக்கடி வந்தால் அச்சமயத்தில் ஆதரவு தரவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜனாதிபதி கோரவில்லையா?" என அவரிடம் கேட்டோம்.

"அப்படி ஜனாதிபதி நேரடியாக எமது ஆதரவைக் கோரவில்லை. ஆனால் எங்களின் நிலைப்பாடு என்னவென்று கேட்டார், பொதுக் கட்டமைப்பு அல்லது அதை ஒட்டிய விடயங்களில் அரசுக்கும் நெருக்கடி வருமானால் அரசுக்கு ஒத்துழைக்க - உதவ - நாம் காத்திருக்கிறோம் என்ற தகவலைச் சொன்னோம். ஏனைய விடயங்களின் போது அவற்றை ஒவ்வொன்றாகப் பரிசீலித்து அந்தந்த சமயங்களில் அரசுக்கு ஆதரவு தருவது குறித்து நாம் சிந்திக்கலாம் என்பதை ஜனாதிபதிக்குக் கோடிட்டுக் காட்டினோம்" - என்றும் அவர் சொன்னார்.

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் குறித்து சம்பந்தன் எம்.பி. அங்கு ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். திருகோணமலைப் பிரச்சினையைத் தீர்ப்பது குறிதது ஆராய்வதற்காக அங்கு ஏற்கனவே சென்ற அரச உயர்மட்டக் குழு அங்கு வைத்து உறுதியளித்த விடயங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்று அரசை அவர் வலியுறுத்தினார்.

சரியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அரச உயர்மட்டக் குழு ஒன்று நாளை (செவ்வாய்க்கிழமை) திருகோணமலைக்குச் செல்லுகின்றது என்ற தகவலை ஜனாதிபதி அங்கு வெளியிட்டார்.

புத்தர்சிலை அமைக்கப்பட்ட விவகாரம் குறித்து நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் மூலம் விரைந்து நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டிருப்பது குறித்தும் -

ஆனால், அந்த நடவடிக்கை இன்னும் எடுக்கப்படால் இழுத்தடிக்கப்படுவது குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரான தினேஷ் குணவர்த்தனவுடன் தொர்புகொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்க தான் உறுதியளிக்கிறார் என ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

திருகோணமலையில் திடீரென முளைத்த புத்தர்சிலை விவகாரத்தை ஒட்டி அங்கு மேலதிகமாகக் குவிக்கப்பட்ட துருப்புகள் அங்கிருந்து உடனடியாக அகற்றப்படவேண்டும் என்பதையும் கூட்டமைப்பினர் அங்கு வற்புறுத்தினர். அது குறித்தும் விரிவாகப் பேசப்பட்டது. பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

கூட்டமைப்பினர் சுமார் நான்கு மணிநேரம் ஜனாதிபதியுடன் நேற்றுப் பேச்சு நடத்திய போதிலும் அதில் இரண்டு மணிநேரம் பழைய அரசியல் பேசுவதில் முடிந்ததாக ஓர் எம்.பி. குறிப்பிட்டார். (ஓ-க)

# புலிகளுடன் சேர்ந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் புலிகளை ஜனநாயக அரசியலுக் குக் கொண்டுவரமுடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்திருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் சிறுபான்மை அரசொன்றை இங்கு வைத்துக்கொண்டு எதையும் சாதித்துவிடமுடியாது.

இலங்கையில் உள்ள அரசமைப்பின்படி அரசை கட்டுப்படுத்தக்கூடிய சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு உண்டு.

இன்று நாம் முன்வைத்திருக்கும் பொதுக் கட்டமைப்புக்கூட ஜே.வி.பியினர் முன்னர் குறிப்பிட்ட நிர்வாகச் சீரமைப்புக்கு உட்பட்டது தானே. அதையே அவர்கள் எதிர்த்தால் அது நியாயமா?

இன்று நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றர். இனியும் என்னால் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது என்றார் ஜனாதிபதி.

"கடந்த வெள்ளிக்கிழமையன்று தங்களிடம் மகஜரொன்றைக் கையளிக்க ஊர்வலமாக வந்த பிக்குகள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசிக் குண்டாந்தடிப் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது பற்றி என்ன கூறுகிறீர்கள்?" என்று கேட்ட போது ஜனாதிபதி கூறியதாவது:-

கண்டியில் நடைபெற்ற பிக்கு எம்.பியின் சாகும்வரையிலான உண்ணாவிரதம் பற்றியும் பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுவதால் உருவாகும் நன்மைகள் பற்றியும் மகாநாயக்க தேரர்களுக்கு எனது மாளிகையில் வைத்து விளக்கமளித்துக்கொண்டிருந்த சமயம் எனது மாளிகையை நோக்கி வந்த பிக்குகளுடன் சிலரும் கைக்குண்டுகளையும் ஆயுதங்களையும் வைத்திருந்தனர். அவர்கள் வன்முறைகளை உண்டுபண்ணும் வகையில் செயற்பட்டுள்ளனர். இந்த வன்முறையாளர்களை அங்கிருந்து அகற்றுவதற்காகவே பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கூட்டத்தை கலைத்தனர். நாட்டைப் பாதுகாப்பதும், வணக்கத் துக்குரிய மகாநாயக்கர்களை பாதுகாக்க வேண்டியதும் எனது கடமையாகும்.- என்று அவர் மேலும் அந்த வானொலிக்கு விளக்கமளித்தார்.

# பொலீஸாரின் நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து நாள்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த பிக்குவின் உடல்நிலை மோசமான கட்டத்தை அடைந்திருந்ததாக அவ்வப்போது அறிவிக்கப்பட்டுவந்தது.

அப்படி மோசமான உடல்நிலையிலிருந்த வண. சோபித்ததேரர் உண்ணாவிரதத்தைக் கைவிட்ட கையோடு கண்டி பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படவில்லை. பதிலாக ஹெல உறுமயவினருக்கு நெருக்கமானவர்களுடையது எனக் கூறப்படும் தனியார் வைத்தியசாலைக்கே எடுத்துச்செல்லப்பட்டார்.

அவர் உண்ணாவிரதத்தை சனியன்று காலை கைவிடாமல் தொடர்ந்திருந்தாரேயானால் பொலீஸார் நீதிமன்ற உத்தரவுப்படி அவரை அங்கிருந்து அகற்றியிருப்பர். அவரது உடல் நிலை மோசமாக இருந்ததாகக் கூறப்பட்டு வந்ததால் அவர் நிச்சயமாக கண்டி பொது வைத்தியசாலையில் பொலீஸாரால் சேர்க்கப்பட்டிருப்பார். அத்தகைய நிலை ஏற்பட்டிருந்தால் கண்டிப் பொது வைத்தியசாலை மருத்துவர்களின் கவனிப்புக்கும் பரிசோதனைக்கும் அவர் உள்ளாகியிருப்பார். அப்படி உள்ளாகியிருந்தால் அவர் உண்ணாவிரதமிருந்த ஐந்து நாள்களில் அவருக்குக் கொடுக்கப்பட்ட - செலுத்தப்பட்ட - நா அலலது வேறு பதார்த்தங்கள் மற்றும் ஊசி மருந்துகள் ஏதும் இருந்தால் அவற்றின் விவரங்கள் எல்லாம் ஆவண ரீதியாக வெளியாகும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவற்றைத் தவிர்க்க - இத்தகையு குழப் பங்கள், கெட்ட பெயர் ஏற்படாமல் தப்பவே - அவசர அவசரமாக அவரது உண்ணாவிரதத்தைக்கைவிடும் முடிவு வெள்ளி இரவு எடுக்கப்பட்டு, சனி காலையில் அவர் உண்ணா விரதத்தைக் கைவிட்டார் என்றும் -

அதையடுத்து ஒப்புக்கு தனியார் வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## புலிகளின் பகுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இருந்துள்ளார். அவரை மட்டும் தடுத்து வைத்துக்கொண்ட புலிகள் ஏனையோரை விடுவித்தனர்.

மூதூர் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் அமல் பிரசன்ன என்ற பொலீஸ் கான்ஸ்டபிளே புலிகளின் பகுதியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி படகு அதிக காற்றுக் காரணமாகத் திசை திரும்பி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கரையொதிங்கியபோதே அந்தப் படகை புலிகள் கைப்பற்றினர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாறு கொலனி, உன்னிச்சை வீதி, மட்டக்களப்பு)

வீரவேங்கை செவ்விழி (பாலசிங்கம் மோகனா கடற்கரை வீதி, பால்சேனை, அம்பாறை)

வீரவேங்கை கதிரொளி (தர்மலிங்கம் வனிதா முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

வீரவேங்கை கதிரமுது (கதிர்காமத்தம்பி, அம்பிகாவதி/அம்பிகா, பெரியபுல்லுமலை, உறுகாமம் மட்டக்களப்பு)

வரவேங்கை கங்கை/இன்பரூபா (வீரசிங்கம் சிறிதேவி, இலுப்படிச்சேனை, கன்னங்குடா மட்டக்களப்பு). (ஓ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி முன்னாள் அதிபர்
அமரர் வி.சிவசுப்பிரமணியம் அவர்களின் மனைவியும்
எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி சிவலோஜனாதேவி தவராஜாவின தாயாருமான
**திருமதி சிரோன்மணி சிவசுப்பிரமணியம்** அவர்களன் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

(30-34-13)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை



தாவடியைப் பிறப்பிடமாகவும், தற்போது சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய வட பிராந்திய போக்குவரத் துச்சபை வீதிப் பரிசோதகர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (12.06.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக கணவரும் கமலநாதன் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), சந்திரநாதன் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெகநாதன் (ஜேர்மனி), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சந்திரமதி, ரதி - சந்திரநாதன் (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெகசோதி (ஜேர்மனி), லிங்கேஸ்வரன் (எரிபொருள் விற்பனை நிலையம், சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் பால்ராஜ், பவானி, மதூசன், துவாரகன், கோபிகன், சுஜன், தர்சிகன், தர்சிகா, சபீனா, மாக்கோஸ், ஜனனி ஆகியோரின் பேரனாரும் றெபீக்காவின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உமாபதி,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
பொ.கமலநாதன்
(மகன் - அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி).

(36528)(30-34-13)

### சிங்கராசா தவஞானச்செல்வம்



*பலாலி வடக்கு,*
*கலைவாணி வீதி.*

பலாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, கிருஸ்ணன் கோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா தவஞானச்செல்வம் நேற்று (12.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(36529)(30-34-13)


**BRIGHTMAN**
*நாவலர் வீதி*
*யாழ்.நகர்*
விடுமுறைக்கால வகுப்பு
A/L 2007
இரசாயனவியல்
ஒட்சியேற்றமும் தாழ்த்தலும்
BY:- DIAS (B.Sc.)
ஆரம்பம்:-14.06.2005
THUS. 1.00 p.m.




புதிய
யூனிவேசல் அக்கடமி
(யாழ். இந்துமகளிர் கல்லூரி அருகில்)
புதிய யூனிவேசல் அக்கடமி மாணவர்களின் பொருளியல் பாடத்தேவை நிறைவாகிறது.
A/L 2007
பொருளியல்
K.உதயன்
ஆரம்பம்: 15.06.2005
புதன் 7.A.M. (N.T.)


## மரண அறிவித்தல்

### டாக்டர் மயில்வாகனம் இராசையா

**(வேலணை, அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி, முன்னாள் டாக்டர், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை - உடுப்பிட்டி வடக்கு - VVT)**



உடுப்பிட்டி வடக்கு, வன்னிச்சியம்மனைப் பிறப்பிடமாகவும் ஊரிக்காடு (நாவலடி) வல்வெட்டித்துறையை (VVT) வசிபபிடமாகவும் கொண்ட Dr.மயில்வாகனம் இராசையா (R.M.O) அவர்கள் நேற்று (12.06.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் விமலாவதிபுஸ்பம் அவர்களின் அன்புக் கணவரும், சிவக்கொழுநது தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதியின் அன்பு மகனும், இராசரத்தினம் பூமணி (கொழும்பு), சுந்தரலிங்கம் அன்னம்மா (கொழும்பு), எந்திரி துரைச்சாமி (Western Provincial Divector - RDA), தவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் சிவக்கொழுந்து தவபுத்திரன் (For mer.uc.VVT - Member), சிவக்கொழுந்து தேவராஜா ஆகி யோரின் அன்பு மைத்துனரும் சுதாரமேஷ் (Teacher - J/Memo rial English School, Manipay), பிரபா லோகேஸ்வரன் (Teacher - J/Sithampara College - VVT), பிரதீப், சுகந்தன் (மாணவன் - சிதம்பராக் கல்லூரி - VVT) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவாலியூர் செல்வராசா ரமேஷ் (Local Govt. Assistant, Valisouth West Pradeshiya Sabha - Manipay), பொன்னம்பலம் லோகேஷ்வரன் (Germany) ஆகியோரின் மாமனாரும் அஸ்வினி, ஓசாயினி ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை நாவலடி, ஊரிக்காடு, உடுப்பிட்டி வடக்கிலுள்ள (விமலா) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவலடி,*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
இ.விமலாவதிபுஸ்பம்
(மனைவி),
செ.ரமேஷ் (மருமகன் - உள்ளூராட்சி உதவியாளர் - பிரதேச சபை, மானிப்பாய்.)

(சி-43385)(30-34-13)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.